வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 08.08.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 241 | பக்கங்கள் : 16

# புலிபாய்ந்தகல் கிராமத்தில் சிங்கள குடியேற்ற முயற்சி!

முல்லைத்தீவு, ஓகஸ்ட் 08

**முல்லைத்தீவின் புலிபாய்ந்தகல் கிராமத்தில் சிங்கள மக்களை குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது.**

**நாயாறுக்கு தெற்கே உள்ள புலிபாய்ந்தகல் கிராமத்தில் சுமார் 150 படகுகளில் வந்த சிங்கள மீனவ குடும்பங்கள் அங்கு குடியேறத் தயாராகி வருகின்றனர் என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார். அண்மையில், இந்தப் பகுதிக்கு பௌத்த பிக்கு ஒருவரும் தனது குழுவினருடன் வந்து சென்றுள்ளார் என்றும் அவர் கூறியுள்ளார்.**

சிங்கள மீனவர்களின் இந்த அத்துமீறல் தொடர்பாக அந்தப் பகுதியில் தொழில் செய்து வரும் தமிழ் மீனவர்கள் தமக்கு தெரிவித்தனர் என்றும் இதையடுத்து, தான் நேரில் சென்று அவதானித்தார் எனவும் மீனவர் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார் என்றும் ரவிகரன் இதன்போது குறிப்பிட்டார்.

மேலும், சிங்கள மீனவர்களின் இந்த அத்துமீறிய குடியேற்றம் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட நீரியல்வளத் திணைக்கள உதவிப்

15

# 13 குறித்து ஜனாதிபதி நாளை விசேட உரை!



கொழும்பு, ஓக. 08

13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் நாளை புதன்கிழமை விசேட உரை யாற்றவுள்ளார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் சர்வகட்சி மாநாட்டை ஜனாதிபதி அண்மையில் நடத்தியிருந்தார். கட்சிகளின் யோசனைகளை முன்வைப்பதற்கு எதிர்வரும் 15ஆம் திகதி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான நிலைப்பாடுகள் தெளிவுபடுத்தல்களை உள்ளடக்கியதாக ஜனாதிபதியின் உரை இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)



## திருமலையில் விமான விபத்து: விமான படையினர் இருவர் பலி!

திருகோணமலை, ஓக. 08

பறப்பு சோதனையில் ஈடுபட்ட விமானம் விழுந்து நொறுங்கிய விபத்தில் விமானப் படையினர் இருவர் உயிரிழந்தனர்.

திருகோணமலை சீனன்குடாவிலுள்ள விமானப் படைக்கு சொந்தமான தளத்தில் நேற்று திங்கட்கிழமை காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விமானிகளுக்கு பயிற்சியளிக்கப் பயன்படும் பி. ரி. 6 ரக விமானம் திருத்தத்தின் பின்னர் சோதனை பறப்பில் ஈடுபட்டபோதே விபத்தில் சிக்கியது. இதில், விமானத்தை செலுத்திய விமானியும் அவருடன் பயணித்த பொறியியலாளரும் உயிரிழந்தனர் என்று விமானப் படை அறிவித்துள்ளது.

இந்த விமான விபத்து குறித்து விசாரிப்பதற்காக விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ விசேட குழு ஒன்றை நியமித்துள்ளார். (ஐ)

## உலக கிண்ண தொடரில் பாகிஸ்தான் பங்கேற்கும்!

இஸ்லாமாபாத், ஓக. 08

இந்தியாவில் நடைபெறவுள்ள ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணி பங்கேற்கும் என்று அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது.

ஒருநாள் உலகக் கிண்ணத் தொடர் எதிர்வரும் ஒக்ரோபர் 15 - நவம்பர் 19 ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் பாகிஸ்தான் அணி பங்கேற்பது தொடர்பில் பலத்த சந்தேகம் நிலவியது.

15

## மீண்டும் ஓர் 'அறகலய'வுக்கு சதித் திட்டம் முன்னெடுப்பு

### புலனாய்வு பிரிவு அறிக்கையாம்!

கொழும்பு, ஓக. 08

நாட்டில் மீண்டும் ஒரு போராட்ட அலையை உருவாக்க சதித் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று அரச புலனாய்வு பிரிவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இரகசிய அறிக்கை ஒன்றை வழங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

விவசாயிகள் மத்தியில் நிலவும் அமைதியற்ற சூழலை பயன்படுத்தியே இந்த சதித் திட்டம் மேற்கொள்ளப்படுவதாக பொலிஸ் உயர் வட்டாரங்களை மேற்கோள்காட்டி தகவல்கள்

15

## முறையற்ற காதல் தொடர்பு; குடும்பஸ்தர் அடித்துக்கொலை!

### சுன்னாகத்தில் நேற்று சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 08

சுன்னாகத்தில் நேற்று ஒருவர் சிலரால் அடித்துக் கொல்லப்பட்டார். இளம் பெண்ணுடன் ஏற்பட்ட முறையற்ற காதல் தொடர்பே இந்தக் கொலைக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

கொல்லப்பட்டவரான 54 வயதான குடும்பஸ்தருக்கும் 19 வயதான இளம் பெண்ணுக்கும் காதல் தொடர்பு ஏற்பட்டுள்ளது.

15

## வழிப்பறியில் ஈடுபட்டு வந்த ஆறு சந்தேக நபர்கள் கைது!

வவுனியா, ஓக. 08

வவுனியாவில் பல வேறு இடங்களில் வழிப்பறியில் ஈடுபட்டு வந்தனர் என்ற குற்றச்சாட்டில் ஆறு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்துடன், இதற்கு பயன்படுத்தப்பட்ட ஒரு கார், இரு மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நெளுக்குளம், பம்பைமடு, வேப்பங்குளம் பகுதிகளில் வீதிகளில் செல்வோரை வழிமறித்து நகைகள், பணம் என்பவற்றை பறிக்கும் சம்பவங்கள் பல பதிவாகின. சுமார் 6 மாதங்களுக்கு மேலாக இந்த குற்றச் செயல்கள் இடம்பெற்று வந்தன.

இது விடயத்தில் தீவிர கவனம்

15

## ஜனாதிபதி - மலையக கட்சிகள் சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டது!

கொழும்பு, ஓக. 08

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இந்திய வம்சாவளி மலையக கட்சிகளுக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வரும் வெள்ளிக்கிழமை நடக்கவிருந்த சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியாவில் தமிழ் முற்போக்கு கூட்டணி, மலையகம்-200 தொடர்பில் நடத்த உள்ள, "நாம் இலங்கையர்" பேரணி காரணமாகவே இந்தக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பில், உசிதமான

15

## விபத்தில் சிக்கிய இளைஞர் மரணம்!

யாழ்ப்பாணம்,ஓக. 08

மோட்டார் சைக்கிள் மதிலுடன் மோதி ஏற்பட்ட விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த இளைஞர் ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

வடமராட்சி - கரவெட்டி - துன்னாலை மத்தியை சேர்ந்த சங்கர் சஞ்சீவன் (வயது 20) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார்.

15

# '13' குறித்து சிங்கள மக்கள் அச்சமடைய தேவையில்லை!

### இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன்

### தமிழர் பிரச்னைக்கு ஜனாதிபதி தீர்வு தருவார்!



கொழும்பு, ஓக. 08

"13 தொடர்பாக வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப் படுத்தும் மக்கள் பிரதிநிதிகளை போன்றே தெற்கில் உள்ள கடும்போக்குவாத சில சிங்களத் தலைவர்கள் வெளியிடும் தீவிர கருத்துகளால் தெற்கில் உள்ள சிங்கள மக்கள் அச்சம் அடையத் தேவையில்லை - என்று கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.

13ஆவது திருத்தச் சட்டம் ஊடாக

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது

பொதுஜன பெரமுன கட்சியிலிருந்து பலரை பிரித்தெடுத்துத் தனி அணியாக தனது ஜனாதிபதி தேர்தலுக்கான கூட்டணியில் சேர்க்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயன்று வருவது பற்றி முன்னரும் இந்தப் பத்தியில் தெரிவித்திருந்தேன்.

அதற்காக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தனிப்பட்ட செயலாளர் மற்றும் நிமல் லான்சா எம். பி. போன்றவர்கள் கடும் முயற்சியில் ஈடுபட்டிருப்பது குறித்தும் அந்தப் பத்தியில் தெரிவித்திருந்தேன்.

அதனை அண்மையில், யாழ்ப்பாணம் வந்திருந்த தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசனும் தான் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தார். பொதுஜன பெரமுனவை உடைப்பதற்கு ரணில் முயன்று வருவதாகவும் அது மிகப்பெரிய பிரச்னையை உருவாக்கலாம் என்றும் மனோ தெரிவித்திருந்தார்.

நிமல் லான்சா குழுவினரின் நகர்வால் கொதிப்படைந்திருக்கும் ராஜபக்ஷ அணியினர் அந்தப் புதிய அணி உருவாவதைத் தடுப்பதற்கு தம்மாலான முயற்சிகள் அனைத்தையும் செய்துவருகின்றனர் எனவும் தெற்கில் விசயமறிந்த பத்திரிகையாளர் ஒருவர் தகவல் சொன்னார்.

அண்மையில், இந்த விவகாரம் தொடர்பாக ஜனாதிபதியை சந்தித்து முறையிட்ட பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ இது தொடர்பில் முறையிட்டபோது பேசிய சில விடயங்கள் இப்பொது சிங்கள ஊடகங்களில் பேசப்படுகின்றன.

உங்களை இந்தப் பதவிக்கு நாங்களே கொண்டுவந்தோம். அதனை மறந்து தமது கட்சியை உடைப்பதற்கு முயற்சிக்க வேண்டாம் என்று பஸில் கூறியபோது, சிரித்துக் கொண்டே பதிலளித்த ரணில், நீங்கள் என்னைக் கொண்டுவரவில்லை. உங்களை நான்தான் காப்பாற்றினேன். அந்த நேரத்தில் நான் உங்களுக்கு உதவியிருக்காவிட்டால் இப்போது நாடு எப்படியிருக்கும் என்பதை நான் சொல்லித் தெரியவேண்டும் என்பதல்ல, நீங்கள் எப்படி இருப்பீர்கள் என்பதும் தெரியாததல்ல என்றாராம்.

ஒரு கட்டத்தில் பொறுமையிழந்த பஸில், 'நீங்கள் அவர்களுக்கு உதவுவதால்தான் அவர்கள் இவ்வாறு எமது கட்சிக்கு எதிராக அணி திரள்கிறார்கள். அவர்களுக்கு உதவுவதையாவது நிறுத்துங்கள்' என்று கோரிக்கை விடுத்தாராம்.

தான் ஆட்சிக்கு வந்த பின்னர் பாராளுமன்றில் பல தடவைகள் அவர்களும் தனக்கு உதவினரெனவும் அவ்வாறு தனக்கு உதவியவர்கள் கோரிக்கை விடுக்கின்றபோது அவர்களுக்கு உதவவேண்டியது தனது கடமை என்றும் கூறிய ரணில் சொன்ன அந்த வார்த்தையைக் கேட்ட பின்னர் பஸிலால் எதனையும் பின்னர் கூற முடியவில்லையாம்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து சஜித் எனது கட்சிக் காரரை ஒட்டுமொத்தமாக அள்ளிக்கொண்டு வெளியேறியபோதே என்னால் அதனை தடுக்கமுடியவில்லை. உங்கள் கட்சியிலிருந்து சிலர் வெளியேறுவதை என்னால் எப்படி தடுக்கமுடியும்? என்று ரணில் பதில் கேள்வி கேட்ட பின்னர் பஸில் அங்கிருந்து சென்றிருக்கிறார்.

பஸிலுடனான இந்தச் சந்திப்புக்குப் பின்னர் அவரை சந்தித்த நிமல் லான்சா குழுவினர் தாம் தமது கட்சியை எதிர்வரும் ஜனவரி மாதத்தில் உத்தியோகபூர்வமாக அறிவித்த பின்னர், ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிடுமாறு கேட்டதாகவும் ஆனாலும் அதுவரை காத்திருக்காமல் தாங்கள் இப்போதே ரணிலுக்கான பிரசாரத்தை தொடக்கி விட்டதாகவும் கூறியிருக்கின்றனர்.

இந்தச் சந்திப்பைப் பற்றிய செய்தியைச் சொன்ன தெற்கின் பத்திரிகை நண்பர் ஒருவர், நிமல் அணியினர் ஜனாதிபதி தேர்தல் முடிந்ததும் தமது அணியிலுள்ள ஒருவருக்கு பிரதமர் பதவியை வழங்க வேண்டும் என்று கேட்டனரெனவும் அதற்கு ஐம்பது முதல் அறுபது எம். பிக்களை உங்களுடன் இணைத்தீர்கள் என்றால் அதனைத் தருவதற்கும் தான் தயாராக இருக்கிறார் என்றும் கூறியிருக்கிறாராம்.

அதனால் உற்சாகமடைந்துள்ள நிமல் அணி ஆள்பிடி வேலையை தீவிரப்படுத்தியிருக்கின்றது.

எங்கே இவர்கள் ஐம்பதுக்கு மேற்பட்ட எம். பிக்களை திரட்டிவிட்டால் அவர்கள் சொல்கின்ற ஒருவருக்கு பிரதமர் பதவியை கொடுக்கவேண்டி வரும் என்பதால் தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்த்தனவையும் நிமல் லான்சா அணியில் சேர்த்துவிட இப்போது ரணில் காய் நகர்த்துகிறார் என்றார் அந்த தெற்கின் பத்திரிகையாள நண்பர்.

இன்றைய பிரதமர் தினேஷ் ஜனாதிபதியின் கல்லூரி நண்பர். கடந்த ஒருவருடமாக இருவருக்குமிடையே நல்ல புரிந்துணர்வும் உறவும் நீடிக்கின்றது. இந்நிலையில் அவரையும் நிமல் லான்சா அணியில் சேர்த்துவிட்டால் அவர்களுக்கு அவரை விடுத்து வேறு ஒரு வரை பிரதமர் பதவிக்கு சிபாரிசு செய்வதே சிக்கலாகிவிடும்.

ரணிலுக்கு இந்த நிமல் லான்சாவை போன்ற 'பொடியன்களை' கையாள்வது பெரிய விசயமா என்ன?

**- ஊர்க்குருவி.**

# மன அழுத்தத்திலிருந்து மாணவரை மீட்பதற்கு வீட்டுத்தோட்டம் சிறந்தது!

## ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஓக. 08

எமது மாணவர்கள் பல்வேறு காரணங்களால் மனஅழுத்தங்களுக்கு ஆளாகி வருகிறார்கள். இதன் வெளிப்பாடுகளில் ஒன்றாகவே அவர்களால் சரிவரக் கற்றலை மேற்கொள்ள முடியவில்லை. போதை, வன்முறை என்று சமூகப்பிறழ்வான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். இவர்களில் ஒருசாரார் தற்கொலை முடிவை நோக்கியும் செல்கிறார்கள். இவர்களை மனஅழுத்தங்களில் இருந்து விடுவிக்க வீட்டுத்தோட்டங்களில் அவர்களை ஈடுபடுத்துவதுதான் சிறந்த பரிகாரமாக அமையும். இது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்ட வழிமுறையாகும் என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டி உள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் மாணாக்க உழவர் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு விதைப் பொதிகளையும் செயன்முறைப் பயிற்சிகளையும் வழங்கும் நிகழ்ச்சி நேற்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அவர் உரையாற்றுகையில்,

வீட்டுத்தோட்டங்கள் சுயசார்புப் பொருளாதாரத்தின் முதற்படி. வீட்டிலேயே எங்களுக்குத் தேவையான உணவுப் பயிர்களை உற்பத்தி செய்யக் கூடியதாக இருப்பதோடு வீட்டுக்கழிவுகளைப் பசளையாகப் பயன்படுத்துவதால் நஞ்சற்ற உணவையும் நாம் பெறக்கூடியதாக உள்ளது. நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கும், உணவு நெருக்கடிக்கும் வீட்டுத்தோட்டம் சிறந்த தீர்வாக அமையும். இந்த அனுகூலங்களைவிட மேலான அனுகூலமாக வீட்டுத்தோட்டங்கள் மனதை அலைபாயவிடாமல் சிந்தனைகளை ஒருமுகப்படுத்தவும் உதவுகின்றது.

தோட்டங்களில் மண்ணைக் கைகளால் அளையும்போது, மண்ணில் உள்ள பற்றீரியாக்களைத் தொடும்போது உடலில் செரற்ரோனின் என்ற ஓமோன் சுரப்பது தூண்டப்படுகிறது. ஆய்வு ரீதியாக நிரூபிக்கப்பட்ட ஓர் உண்மை இது. செரற்ரோனின் மனச்சோர்வைக் களைந்து, மனஅழுத்தங்களில் இருந்து விடுபடவைத்து, மனஆரோக்கியத்தை மேம்படுத்தும் ஓர் இரசாயனம் ஆகும். இயற்கையாக செரற்ரோனின் உருவாகுவதைத் தூண்டும் வீட்டுத்தோட்டச் செய்கையில் மாணவர்களை ஈடுபடுத்தினால் செயற்கையாக உற்சாகத்தைத் தூண்டும் ஆபத்தான போதைக்கு அவர்கள் அடிமையாக மாட்டார்கள்.

ஆசிரியர்கள் வீட்டுத்தோட்டம் என்றால் அது விவசாயம் பயிலுகின்ற மாணவர்களுக்கு மாத்திரம்தான் என்று நினைக்கிறார்கள். பெற்றோர்கள் வீட்டுத்தோட்டங்களில் மாணவர்கள் ஈடுபட்டால் அவர்களின் படிப்புப் பாழாகி விடும் என்று கருதுகிறார்கள். இந்த மனோநிலைகளில் மாற்றம் வேண்டும். பயிர்களைப் பீடிக்கும் பூச்சிகளால் பயிர்களுக்கு மாத்திரம் தான் சேதம். ஆனால், புத்தகப் பூச்சிகளாகவே வளரும் மாணவர்கள் தமக்கும் சமூகத்துக்கும் கேடாகவே அமைவார்கள். இதைப் புரிந்து கொண்டு ஆசிரியர்களும் பெற்றோர்களும் மாணவர்களை வீட்டுத்தோட்டங்களில் ஈடுபடவைக்க வேண்டும் - என்றார். (ஐ)

# நான்காவது தமிழியல் ஆய்வு மாநாடு யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பம்!



யாழ்ப்பாணம், ஓக. 08

நான்காவது அனைத்துலக தமிழியல் ஆய்வு மாநாடு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள கைலாசபதி கலையரங்கில் நேற்று திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் ஆரம்பமானது.

"சமூகக் கட்டுமானத்தில் சங்கமருவியகால அற இலக்கியங்கள்" எனும் கருப்பொருளை மையமாகக் கொண்டு நடைபெறும் இந்த மாநாடானது இன்றைய தினமும் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் கிருஸ்ண பிள்ளை விசாகரூபன் தலைமையில் ஆரம்பமான ஆய்வு மாநாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணை வேந்தர் சி. சிறிசற்குணராஜா, கலைப்பீட பீடாதிபதி சி. ரகுராம், செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

நான்காவது அனைத்துலக தமிழியல் ஆய்வு மாநாட்டில் கலை, கலாசார நிகழ்வுகள், ஆய்வுரைகள் மற்றும் புலமையாளர் கௌரவிப்புக்கள் நடைபெற்றன. (ஐ)

# மேன்முறையீட்டு நீதிமன்றின் பதில் தலைவராக ராஜகருணா



கொழும்பு, ஓக. 08

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவராக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சோபித ராஜகருணா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

மேல் நீதிமன்ற நீதிபதி சஞ்சீவ மொராயிஸ் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்

# வர்த்தகர் சுட்டுக் கொலை; சந்தேகநபர்கள் மூவர் கைது!

கொழும்பு, ஓக. 08

கொழும்பு - பொரளை லெஸ்லி ரணகல மாவத்தையில் வர்த்தகர் ஒருவரை சுட்டுக் கொன்ற சம்பவம் தொடர்பில் மூவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கொழும்பு குற்றப் பிரிவு தெரிவித்துள்ளது.

மூவரும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுவைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் மே 20 ஆம் திகதி இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவரும் வத்தளை ஹேகித்த பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

Eelanadu
08.08.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், ஆடி 23

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அமித் ஷாவின் கூற்று

அமித் ஷா தற்போது இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் சக்தி வாய்ந்த தலைவர். மோடிக்கு அடுத்த நிலையில் நோக்கப்படுபவர். ஆனால், மோடியின் கவர்ச்சி இல்லாவிட்டால் அமித் ஷா இல்லை. பாரதிய ஜனதா கட்சியின் ஜனவசியம் – நம்பிக்கை – முகம் அனைத்தும் தற்போதைய நிலையில் மோடி மட்டும்தான். மோடிக்கு பதிலாக பிறிதொருவரை காண்பிக்கக்கூடிய நிலையில் பாரதிய ஜனதா கட்சியில்லை. இவ்வாறானதொரு நிலையில் பாரதிய ஜனதா கட்சியின் இரண்டாம் நிலை தலைவரான அமித் ஷா இராமேஸ்வரத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தின்போது, ஈழத் தமிழ் மக்கள் பெரும் கொலைக்கு ஆளாகினர் என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

இதனை ஓர் அரசியல் பிரசார உக்தியாக நோக்குவதா அல்லது இந்தியாவின் நீண்டகால அரசியல் நகர்வுகளுக்கான மூலதனமாகக் கொள்வதா? இங்கு கவனிக்க வேண்டிய விடயம், இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இது தொடர்பில் வாய் திறக்கவில்லை. ஆனால், இதே அலி சப்ரி கனடிய பிரதமரின் கூற்றுக்கு உடனடியாகவே கண்டனம் தெரிவித்திருந்தார். ஆனால், பலமான நிலையிலிருக்கும் பாரதிய ஜனதா கட்சியின் அமித் ஷாவின் கூற்றுக்கு எதிர்வினையாற்ற சப்ரியால் முடியவில்லை. மேலும் சப்ரி ஓர் இஸ்லாமியர்.

இறுதி யுத்தம் இடம்பெற்றபோது, காங்கிரஸ் கட்சியே ஆட்சியிலிருந்தது. அதேபோன்று, தமிழ் நாட்டில் கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் (தி. மு. க.) இருந்தது. இந்த இரண்டுக்கும் எதிராகவே பாரதிய ஜனதா கட்சி தமிழ்நாட்டுக்கான தேர்தல் வியூகங்களை அமைத்திருக்கின்றது. இறுதி யுத்தத்தின் போது, தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர், அதனை காங்கிரஸும் அதனோடு கூட்டணி அமைத்திருந்த திராவிட முன்னேற்றக் கழகமும் தடுக்கத் தவறிவிட்டன – அந்த வகையில் ஈழத் தமிழ் மக்களின் கண்ணீருக்கு இவர்களும் பொறுப்பாளிகள் – என்றவாறான ஒரு பிரசாரத்தை ஏற்கனவே, பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாட்டு தலைவர் அண்ணாமலை முன்னெடுத்துவிட்டார். அதற்கு பலம் சேர்க்கும் வகையிலேயே அமித் ஷா, தற்போது இந்தக் கருத்தை வலியுறுத்தியிருக்கின்றார். இது மட்டும்தான் விடயமென்று கருதிவிடலாமா?

இந்தியாவை பொறுத்தவரையில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும்கூட அது ஒரு தனிப்பெரும் கட்சியென்னும் நிலையை எய்திவிட்டது. அதனோடு ஒப்பிட்டால் இந்தியாவில் பிறிதொரு தனிப்பெரும் கட்சி இல்லை. எனவே, தனியாக அல்லது கூட்டாக ஆட்சியை கைப்பற்றும் தகுதியுள்ள பிரதான கட்சி அது மட்டும்தான். பாரதிய ஜனதாவை வீழ்த்துவதற்கு அனைவரும் சேர வேண்டியிருப்பதிலிருந்தே இந்த யதார்த்தம் தெளிவாக தெரிகின்றது.

இதேவேளை, பாரதிய ஜனதா கட்சியும் அதன் முதுகெலும்பாக செயல்படும் ஆர். எஸ். எஸ். இயக்கமும் இந்துத்வா இலக்கொன்றை கொண்டிருக்கின்றது. அந்த இலக்கென்பது, வெறுமனே இந்தியாவுடன் மட்டுப்பட்ட ஒன்றல்ல. அது அகண்ட பாரதம். இவ்வாறான இலக்கு இந்தியாவில் வேறு எந்தவொரு கட்சிக்கும் கிடையாது. இந்த நிலையில் அயல் நாடுகளிலுள்ள இந்து மக்கள் மீதான செல்வாக்கை தக்க வைக்கும் உக்திகள் தொடர்பிலும் பாரதிய ஜனதா சிந்திக்காமல் இருக்குமென்று கருதினால் அது தவறாகும்.

அமித் ஷாவின் கூற்றை இந்தப் பின்புலத்திலும் நோக்க வேண்டும். எவ்வாறெனினும், ஈழத் தமிழ் மக்கள் பெருந்தொகையில் கொல்லப்பட்டனர் – என்னும் கருத்து நமக்கு அருகாமையிலுள்ள பிராந்திய சக்தியொன்றை ஆளும் கட்சியின் இரண்டாம் நிலைத் தலைவர் ஒருவரால் சுட்டிக்காட்டப்படுவதான ஈழத் தமிழ் மக்களுக்கு அநீதியொன்று இடம்பெற்றிருக்கின்றது என்பதை ஏனையவர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கு பயன்படலாம்.

# தண்ணீரை சிக்கனமாக பாவியுங்கள் கிளிநொச்சி மக்களுக்கு அறிவுறுத்து!

*கிளிநொச்சி, ஓக. 08*

கிளிநொச்சியில் தற்போது நிலவி வருகின்ற கடும் வறட்சியான காலநிலை காரணமாக நாளாந்தம் பொது மக்களுக்கு தேவைப்படும் நீரை சுத்திகரித்து வழங்குவதில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே, பொது மக்கள் நீரை மிகவும் சிக்கனமாக பயன்படுத்துமாறும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் கிளிநொச்சி மாவட்ட பொறியியலாளர் அலுவலகம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அதிக வெப்பமான காலநிலை காரணமாக நீர் மூலங்களில் நீரின் அளவு குறைந்து வருகிறது. இதன் காரணமாக நாளாந்த நீர்த் தேவையின் அளவில் சுத்திகரித்து விநியோகிப்பதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ள தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் விநியோகிக்கின்ற தண்ணீரை பொது மக்கள் கொதிக்க வைத்து பாதுகாப்பாக அருந்துமாறும் கேட்டுள்ளனர். (ஐ)

# வில்பத்து சரணாலயத்தில் வறட்சி; விலங்குகள் தண்ணீரின்றி தவிப்பு

*கொழும்பு, ஓக. 08*

கடும் வறட்சி காரணமாக வில்பத்து தேசிய வனப் பூங்காவில் உள்ள சிறிய ஏரிகள் பலவற்றில் நீர் வற்றியுள்ளது.

வில்பத்து தேசிய வனப் பூங்காவில் கிட்டத்தட்ட 106 ஏரிகள் மற்றும் குளங்கள் உள்ளன.

ஏறக்குறைய இவற்றில் பெரும்பாலானவை காய்ந்து போனதுடன் வில்பத்து தேசிய வனப் பூங்காவில் வசிக்கும் விலங்குகளும் விலங்குகளுக்கு தண்ணீர் கிடைக்காமல் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளன.

இது தொடர்பில், வில்பத்து தேசிய வனப் பூங்காவின் காப்பாளர் சுரங்க ரத்நாயக்கவிடம் கேட்டபோது,

தேசிய வனப் பூங்காவில் சுமார் 106 சிறிய ஏரிகள் உள்ளதாகவும் அவற்றில் 50 வீதமானவை கடும் வறட்சி காரணமாக வறண்டுவிட்டன - என்றார். (ஐ)

# மஹர சிறைக் கைதிகளின் போராட்டம் தொடர்கிறது

*கொழும்பு, ஓக. 08*

மஹர சிறைச்சாலை கைதிகள் சிலரினால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

சிறைச்சாலை ஊடகப் பேச்சாளரும் மேலதிக சிறைச்சாலை ஆணையாளருமான சந்தன ஏக்கநாயக்க இந்த விடயத்தை தெரிவித்தார்.

மஹர சிறைச்சாலையின் கூரை மீது ஏறி ஐந்து கைதிகள் நேற்றுமுன்தினம் காலை ஒன்பது மணி முதல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சிறைச்சாலையில் தொடர்ந்தும் தங்கமுடியாது எனவும் தம்மை உடனடியாக விடுவிக்குமாறு கோரியுமே குறித்த கைதிகள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

போதைப்பொருளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறைத் தண்டனை அனுபவித்து வந்தவர்களே இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக சந்தன ஏக்கநாயக்க மேலும் கூறினார். (அ)

# சொற்பொழிவு

*யாழ்ப்பாணம், ஓக. 08*

நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் வாராந்த சுக்கிர வார சிறப்பு சொற்பொழிவு ஆலயத்தின் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கத்தின் தலைமை உரையைத் தொடர்ந்து, சிறப்பு சொற்பொழிவை இளம் சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன் "கொற்ற வேல் " என்னும் தலைப்பில் ஆற்றுவார்.

சொற்பொழிவின் இறுதியில் மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஐ)

# காங்கேசன்துறையில் கஞ்சா கடத்தியவர் கைது!

*யாழ்ப்பாணம், ஓக. 08*


காங்கேசன்துறை கடற்படையின் சோதனை நடவடிக்கையின்போது 54 கிலோ கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது. அத்துடன், ஒருவர் கைது செய்யப்பட்ட நிலையில் இருவர் தப்பியோடியுள்ளனர்.

கடற்படைக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே இந்த கஞ்சா கைப்பற்றப்பட்டது. அத்துடன், கிளிநொச்சி தர்மபுரம் பகுதியை சேர்ந்த 26 வயது இளைஞர் கைது செய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட இளைஞனையும் மீட்கப்பட்ட கஞ்சாவையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக காங்கேசன்துறை பொலிசாரிடம் கடற்படையினர் கையளித்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், தப்பிச் சென்ற இருவரையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு






**மேடம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலர் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். யாரை நம்புவது என்கிற குழப்பத்திற்கு ஆளாவீர்கள். ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**இடபம்**

விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக்கும். வரும். வேலைச்சுமையால் சோர்வு அடைவீர்கள். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**மிதுனம்**

தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். மதிப்புக் கூடும் நாள்.

**கடகம்**

உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். முன்னேறும் நாள்.

**சிம்மம்**

கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு அசதி நீங்கி உற்சாகம் அடைவீர்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். நினைத்ததை முடிப்பீர்கள். புது அத்தியாயம் தொடங்கும்.

**கன்னி**

சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களை எல்லாம் கையில் எடுத்துக் கொண்டு இருக்காதீர்கள். சிலரின் தவறுகளை சுட்டிக் காட்டுவதன் மூலம் சச்சரவுகளில் சிக்குவீர்கள்.

**துலாம்**

உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். விலை உயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். மரியாதை கூடும்.

**விருட்சிகம்**

ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபாரத்தில் இராஜதந்திரத்தால் லாபத்தை அதிகரிப்பீர்கள். அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**தனுசு**

குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நீண்டநாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். புதுமை படைக்கும் நாள்.

**மகரம்**

எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு. நன்மை கிட்டும் நாள்.

**கும்பம்**

குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். பாராட்டப்படுவீர்கள். அணுகுமுறையால் சாதிக்கும் நாள்.

**மீனம்**

கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

# கருணாநிதி நினைவுதினம் தி. மு. க. அமைதி ஊர்வலம்!

*சென்னை, ஓக. 08*

முன்னாள் தமிழக முதல்வர் கருணாநிதியின் 5ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு சென்னையில் முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையில் தி. மு. கவினர் அமைதிப் பேரணி நடத்தினர்.

கருணாநிதி சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்திய முதல்வர் மு. க. ஸ்டாலின், பின்னர் அங்கிருந்து பேரணியை தொடங்கினார்.

முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான இந்த பேரணியில் தமிழக அமைச்சர்கள் துரைமுருகன், நேரு, பொன்முடி, எ. வ. வேலு, உதயநிதி ஸ்டாலின், மஸ்தான், தங்கம் தென்னரசு, சேகர் பாபு உள்ளிட்டோர் பங்கேற்றனர். மக்களவை உறுப்பினர் டி.ஆர்.பாலு, தயாநிதி மாறன், கனிமொழி உட்பட தி.மு.க அமைச்சர்கள், மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தி. மு. க. மூத்த நிர்வாகிகள் என ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்த பேரணியில் பங்கேற்றனர்.

சுமார் ஒன்றரை கிலோ மீற்றர் தூரம் சென்ற இந்த பேரணி, சென்னை மெரீனா கடற்கரையில் அமைந்துள்ள கருணாநிதி நினைவிடத்தில் நிறைவடைந்தது. அங்கு முதல்வர் ஸ்டாலின் உட்பட அனைவரும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். இந்த பேரணியை முன்னிட்டு ஏராளமான பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (ஐ)

# ராகுல் காந்தியை கண்டு பா. ஜ. க. அஞ்சுகின்றதா?

## முதல்வர் ஸ்டாலின் கேள்வி

*சென்னை, ஓக. 08*

காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தியை கண்டு பா. ஜ. க. அஞ்சுகிறதா என்று முதல்வர் மு. க. ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவதூறு வழக்கில் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்திக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து சூரத் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதையடுத்து ராகுல் காந்தியின் எம். பி. பதவி பறிக்கப்பட்டது. இந்த தீர்ப்புக்கு எதிரான மேல் முறையீட்டு வழக்கில், தண்டனையை நிறுத்தி வைத்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

எனினும், அவரின் எம். பி. பதவி நீக்கம் திரும்பப் பெறப்படவில்லை. இதற்கு கண்டனம் தெரிவித்து முதல்வர் மு. க. ஸ்டாலின் தனது ருவிற்றர் பதிவில் கூறியிருப்பதாவது:

“காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்திக்கு விதிக்கப்பட்ட தண்டனையை உச்ச நீதிமன்றம் நிறுத்திவைத்த பிறகும், அவரின் எம். பி. பதவி நீக்கத்தை ஏன் திரும்ப பெறவில்லை? அவரை தகுதி நீக்கம் செய்யும் போது காட்டப்பட்ட அவசரம், இப்போது எங்கே போனது? பாராளுமன்றத்தில் சகோதரர் ராகுல் காந்தியின் இருப்பைக் கண்டு பா. ஜ. க. அஞ்சுகிறதா? - என்று கூறியுள்ளார். (ஐ)

### காவிரி தண்ணீர் பிரச்னை:

# கர்நாடக அரசுடன் பேச்சு என்பதற்கே இடமில்லை!

*சென்னை, ஓக. 08*

காவிரி விவகாரத்தில் உச்ச நீதிமன்றம் சில திருத்தங்களோடு தீர்ப்பு வழங்கிய பின்னர், இரு மாநிலங்களிடையே பேச்சு என்பதற்கே இடமில்லை என்று மத்திய இணை அமைச்சர் ராஜீவ் சந்திர சேகருக்கு, அமைச்சர் துரைமுருகன் பதில் அளித்துள்ளார்.

காவிரியில் தண்ணீர் திறந்துவிடவேண்டும் என்று கூறும் அதிகாரம், காவிரி மேலாண்மை சபைக்குத்தான் உண்டு. அந்த சபை கூட்டிய கூட்டங்களில், தமிழக நீர்வளத் துறைச் செயலர் சந்தீப் சக்சேனா பங்கேற்று, தமிழகத்துக்கு தண்ணீர் திறக்குமாறு கர்நாடகத்தை அறிவுறுத்த வேண்டும் என்று பலமுறை கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆனாலும், காவிரி மேலாண்மை சபை இதுவரை முழுமையாக செயல்படவில்லை. எந்தெந்த மாதங்களில், எவ்வளவு நீரை கர்நாடகம் திறந்து விட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது. இந்த சபை மத்திய அரசின் கீழ் இயங்குகிறது. எனவேதான், தமிழகத்துக்கு தண்ணீரைத் திறந்துவிட கர்நாடகத்தை அறிவுறுத்துமாறு சபையிடம் கேட்டுள்ளோம்.

இது தொடர்பாக முதல்வர் எழுதிய கடிதத்துக்கு, பிரதமர் அலுவலகமோ, மத்திய நீர்வளத் துறை அமைச்சரோ பதில் அளிக்காத நிலையில், மத்திய இணை அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர், “கர்நாடகத்தில் காங்கிரஸ் ஆட்சி, தமிழகத்தில் திமுக ஆட்சி, இரண்டும் ஓர் அணியில் இருக்கிறார்கள். ஏன் பிரச்சினையை நேரில் பேசித் தீர்த்துக் கொள்ளக் கூடாது?” என்று தெரிவித்திருக்கிறார்.

காவிரி நடுவர் மன்றம் தீர்ப்பு வழங்கி உச்ச நீதிமன்றம் சில திருத்தங்களோடு தீர்ப்பு வழங்கிவிட்ட பின்னர், இரு மாநிலங்களிடையே பேச்சு என்பதற்கே இடமில்லை - என்றார். (ஐ)

# மதுவால் கிடைக்கும் வருவாயை நம்பி தமிழக அரசு இயங்குகிறது

*திருப்பரங்குன்றம், ஓக. 08*

மதுவால் கிடைக்கும் வருவாயை நம்பி தமிழ்நாடு அரசு இயங்கிக் கொண்டிருக்கிறது என்று பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை விமர்சித்துள்ளார்.

என் மண் என் மக்கள் யாத்திரையை மேற்கொண்டு வரும் தமிழ்நாடு பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை, மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றத்தில் நேற்று நடைபயணம் மேற்கொண்டார்.

அங்கு பேசிய அவர் “மதுவால் கிடைக்கும் வருமானம், தொழுநோயாளி கையில் இருக்கும் வெண்ணைக்குச் சமம் என சொன்னவர் மறைந்த முன்னாள் முதல்வர் அண்ணா. ஆனால், மதுவிலிருந்து வரும் வருமானத்தில் ஆட்சி செய்ய வேண்டிய நிலையில் தமிழ்நாடு அரசு உள்ளது.

தமிழகத்தின் முதல் குடும்ப ஊழல் குறித்து அமைச்சர் பி. டி. ஆர். பழனிவேல் தியாகராஜன் பேசி நீண்ட நாட்கள் ஆகிவிட்டன. ஒருமுறை உண்மையை பேசியதற்கு அவருக்கு கிடைத்த பரிசு அமைச்சரவை மாற்றம். தமிழகத்தின் வளர்ச்சிக்கு மிக முக்கிய காரணம் சௌராஷ்டிரா மக்கள். நெசவுத்தொழில் செய்யும் அவர்களுக்கு விசைத்தறிக்கூடம் அமைத்துத் தருவதாக தி. மு. க. வாக்குறுதி கொடுத்தது. ஆனால், இன்னும் நிறைவேற்றவில்லை - என்றார்.

ஈழநாடு



# 13 ஐ முழுமையாக நீக்குவதே சிறந்தது!

## விமல் வீரவன்ஸ இப்படி அறிவுரை



**கொழும்பு, ஓக. 08**

**அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முற்றாக நீக்கி விடுவதே சிறந்த வழி என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறுகையில்- 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் நாடு பிளவுபடும் என்று நாம் தொடர்ச்சியாக எச்சரிக்கை விடுத்து வருகின்றோம். இந்த எச்சரிக்கையை மீறி ஜனாதிபதி செயற்படக்கூடாது.

நாட்டில் தற்போது 13 ஆவது திருத்தச் சட்ட விவகாரம் பெரும் பிரச்சினையாக உருவெடுக்கின்றது. எனவே, அந்தச் சட்டத்தை முற்றாக நீக்கி விடுவதே சிறந்த வழி.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்காக இந்த நாட்டைப் பிளவுபடுத்த ஒருபோதும் இடமளியோம்-என்றார். (அ)

# காட்டு யானை தாக்கி இளம் குடும்பஸ்தர் பலி!

கொழும்பு, ஓக. 08

காட்டு யானை தாக்கி ஒருவர் சாவடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் அனுராதபுரம், மதவாச்சி பிரதேசத்தில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

ஒரு பிள்ளையின் தந்தையான 26 வயதுடைய பி.சாரங்க என்ற நபரே இதன்போது உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் வயல் நிலத்தைப் பாதுகாக்க வயலில் தங்கச் சென்ற வேளை யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மதவாச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# வீட்டில் கஞ்சா செடி வளர்த்தவர் கைது!

கொழும்பு, ஓக. 08

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தரவளை தோட்டத்தில் கஞ்சா செடி வளர்த்த சந்தேகநபர் ஒருவரைக் ஹற்றன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹற்றன் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய, குறித்த சந்தேகநபரின் வீட்டுப் பகுதியைச் சுற்றிவளைத்த பொலிஸார், அங்கு தேடுதலில் ஈடுபட்டபோது, பூந்தோட்டத்தில் வளர்க்கப்பட்ட இரண்டரை அடி உயரமான கஞ்சா செடி கண்டுபிடிக்கப்பட்டது.

சந்தேகநபரை விசாரணைகளின் பின்னர் ஹற்றன் நீதிவானிடம் முன்னிலைப்படுத்த ஹற்றன் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

# வவுனியா சிறைச்சாலையில் நீக்கப்படும் கட்டுப்பாடுகள்!

கொழும்பு, ஓக. 08

தொற்றுநோய் நிலைமை காரணமாக வவுனியா சிறைச்சாலையில் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டை நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலையில் ஒரு கைதிக்கும் சிறைச்சாலை அதிகாரிக்கும் அம்மை நோய் ஏற்பட்டதால் அதன் பரவலை தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, சிறை வளாகத்துக்குள் நடமாட்டக் கட்டுப்பாடுகளை விதிக்க சிறைச்சாலை திணைக்களம் நடவடிக்கை எடுத்தது.

கடந்த மாதம் 25ஆம் திகதி முதல் இரண்டு வாரங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த நடமாட்டக் கட்டுப்பாடுகள் இன்றுடன் முடிவடைய உள்ளதாக வவுனியா பிராந்திய தொற்றுநோய் பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது.

அதன்படி இன்று முதல் வழமை போன்று அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிராந்திய தொற்றுநோய் தடுப்புப் பிரிவு வவுனியா சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த நாட்டில் உள்ள சிறைச்சாலைகளுக்கு உணவு மற்றும் மருந்து விநியோகத்தில் ஏற்பட்டுள்ள குறைபாடுகள் காரணமாக, கைதிகள் கடும் நெருக்கடியில் உள்ளதாக கைதிகளின் உரிமைகள் பாதுகாப்புக் குழுவின் பொதுச் செயலாளர் சுதேஷ் நந்திமால் குறிப்பிட்டார். (அ)

# பிரான்ஸ் நிதியுதவியின் கீழ் போஷாக்கு திட்டம் ஆரம்பம்!

கொழும்பு, ஓக. 08

பிரான்ஸ் நிதியுதவியின் கீழ், நானு ஓயா டெஸ்போஸ்ட் தோட்ட பகுதியில் உள்ள மக்களின் போஷாக்கை மேம்படுத்தும் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன் முதற்கட்டமாக 22 குடும்பங்களுக்கு போஷாக்கினை மேம்படுத்தும் வகையிலான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

குறித்த தோட்ட பகுதியில் உள்ள வைத்தியசாலையில் இன்று இடம்பெற்ற இந்த நிகழ்வில், பிரான்ஸ் தூதுவர், ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க, நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் நந்தன கலபொட உள்ளிட்டோரும் பங்கேற்றனர். (அ)

# தென் மாகாண அதியுயர் மின்கடத்தல் பாதை நிர்மாணத் திட்டத்தில் இழுபறி!

கொழும்பு, ஓக. 08

கொழும்பில் இருந்து, தென் மாகாணத்துக்கான அதியுயர் மின்கடத்தல் பாதையை நிர்மாணிப்பதற்கான திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், காலியில் உள்ள தேயிலை தோட்டமொன்றின் ஊடாக செல்லும் 600 மீற்றர் தூரம் கொண்ட பிரதேசம் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தனியார் மின்னுற்பத்தி நிலையத்திடமிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்யாமல், தென் மாகாணத்துக்கு மின்சாரத்தை வழங்கக்கூடிய ஒரே வழி இதுவாகும்.

இந்தநிலையில், குறித்த 600 மீற்றர் தூரத்துக்கான இழப்பீட்டுத் தொகையை அந்த சிறு தோட்ட உரிமையாளரினால் கோரப்பட்டுள்ளதுடன், அதனை வழங்க அதிகாரிகள் வழங்க இணங்காததால், அடிப்படை பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியில் தென் மாகாணத்திற்கு மின்சாரம் வழங்குவது தொடர்பான அதியுயர் மின் கடத்தல் பாதையின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

எவ்வாறாயினும், குறித்த சிறுதோட்ட காணி உரிமையாளர் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகையை மதிப்பாய்வு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு முன்னதாக மேற்கொண்டதாக ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

குறித்த தேயிலை தோட்டத்திற்கான 600 மீற்றர் பகுதியில் உள்ள பணிகள் நிறைவடையுமாயின் தென் மாகாணத்திற்கு தனியார் மின்னுற்பத்தி நிலையத்திடமிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்யாமல், தென் மாகாணத்துக்கு மின்சாரத்தை வழங்க முடியும் என பொறியிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் தேசிய மின் கட்டமைப்பில் நான்காயிரத்து 500 மெகாவொட் மின்சாரம் தேவைப்படுவதுடன், தற்போது இரண்டாயிரத்து 200 மெகாவாட் மின்சாரமே பயன்படுத்தப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகிறது. (அ)

# ரயிலில் பயணித்த சீனப் பெண்ணை தாக்கி தொலைபேசி பறிக்க முற்பட்டவர்கள் கைது!

கொழும்பு, ஓக. 08

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கி ஓடும் உடரட்ட மெனிகே ரயிலில் வீடியோ எடுத்துக்கொண்டிருந்த சீனப் பெண்ணை தடியால் தாக்கி, தொலைபேசியைக் கொள்ளையடிக்க முற்பட்ட இரண்டு சந்தேக நபர்களை நாவலப்பிட்டி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

லியு குயின் என்ற சீனப் பெண், தனது கணவர் மற்றும் மகளுடன் இலங்கைக்கு சுற்றுலா வந்துள்ளார்.

எல்ல ரயில் நிலையத்திலிருந்து நேற்று முன் தினம் பயணித்தபோது, ரயிலுக்கு வெளியே தனது கையடக்கத் தொலைபேசியை நீட்டி, அழகிய இடங்களை வீடியோ எடுத்துக்கொண்டிருந்தார்.

நாவலப்பிட்டி இகுருஓயா ரயில் நிலையத்தை அடைந்த போது, ரயில் பாதையில் நின்றுகொண்டிருந்த மூன்று இளைஞர்களில் ஒருவர் படம் பிடித்துக் கொண்டிருந்த பெண்ணின் கையை நீளமான தடியால் தாக்கியுள்ளார். எனினும், சீனப் பெண் தொலைபேசியை பத்திரமாக ரயிலின் உள்பக்கமாக எடுத்து விட்டார்.

அந்த இளைஞர்கள் சீனப் பெண்ணை அடிக்கும் காட்சிகள் அவரது தொலைபேசியில் பதிவாகியுள்ளது, மேலும் அடித்ததில் அவரது கையில் காயம்



ஏற்பட்டது.

பின்னர், சம்பவம் தொடர்பில் போக்குவரத்து ஆலோசகருக்கு தெரியப்படுத்தியதையடுத்து, சீன மொழியில் தனது முறைப்பாட்டை பதிவு செய்து சிங்களத்தில் மொழி பெயர்த்து முறைப்பாடு மற்றும் கைத்தொலைபேசியில் பதிவான காட்சிகளை வட்ஸ்அப் தொழிநுட்பம் மூலம் நாவலப்பிட்டி பொலிஸாருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

பொலிஸார் உடனடியாக செயற்பட்டு சந்தேகநபர்களில் இருவரை கைது செய்துள்ளனர்.

மற்றுமொரு சந்தேக நபரை கைது செய்வதற்கான நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்துள்ளதாக நாவலப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நாவலப்பிட்டி இகுருஓயாவை சேர்ந்தவர்கள் எனவும், அவர்கள் 22-24 வயதுக்குட்பட்டவர்கள் எனவும், சந்தேகநபர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் எனவும், போதைப்பொருள் குற்றச்சாட்டு தொடர்பில் நாவலப்பிட்டி நீதவான் மற்றும் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டவர்கள் எனவும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். (அ)

# தெற்காசியாவில் 76 சதவீத சிறார்கள் அதிக வெப்ப தாக்கத்தினால் பாதிப்பு

## யுனிசெவ் மதிப்பாய்வில் தகவல்

கொழும்பு, ஒக. 08

**யுனிசெவ் மதிப்பாய்வின்படி, ஏனைய அனைத்துப் பிராந்தியங்களுடன் ஒப்பிடும்போது, தெற்காசியாவில் 76 சதவீதமான சிறார்கள் அதிக வெப்பநிலை தாக்கத்திற்கு உள்ளாவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**அதன்படி, தெற்காசியாவில் 18 வயதுக்குட்பட்ட சுமார் 460 மில்லியன் சிறார்கள் அதிக வெப்பநிலைக்கு உள்ளாகியுள்ளனர்.**

குறிப்பாக தெற்காசியாவில் 4 சிறார்களில், 3 பேர் ஏற்கனவே அதிக வெப்பநிலைக்கு ஆளாகியுள்ளனர்.

உலகளவில் ஜூலை மாதம் இதுவரையில் பதிவு செய்யப்பட்ட அதிக வெப்பமான மாதமாகும்.

தெற்காசியாவில் உள்ள நாடுகள் தற்போது உலகில் அதிக வெப்பமானவை அல்ல,

ஆனால் தெற்காசியாவில் நிலவும் வெப்பம், மில்லியன் கணக்கான பாதிக்கப்படக்கூடிய சிறார்களின் உயிருக்கு ஆபத்தான அபாயங்களைக் கொண்டுவருவதாக யுனிசெவ் இன் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் சஞ்சய் விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நிலவும் அதிக வெப்பத்துடனான காலநிலை காரணமாக சிறார்களிடையே நோய்கள் பரவக்கூடிய அதிக வாய்ப்புகள் உள்ளதாக சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது.

இதன் காரணமாக தாய்மார்கள் சிறார்கள் தொடர்பில் அதிக அவதானம் செலுத்த வேண்டும் என ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா கோரிக்கை விடுத்துள்ளார்.

தலைவலி, வாந்திபேதி, தூக்கமின்மை, அதிக தூக்க கலக்கம், மற்றும் பசியின்மை போன்றன ஏற்படக்கூடிய வாய்ப்புகள் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், நீர் அருந்தாமல் சிறுவர்கள் பாடசாலை உள்ளிட்ட வெளியிடங்களுக்குச் செல்லும்போது, அவர்கள் அசௌகரியத்துக்கு உள்ளாக நேரிடும்.

இதனை தவிர்த்து கொள்ளவதற்காக, அதிக நீரை அருந்துதல், இளநீர், தோடம்பழம், மற்றும் எலும்பிச்சை உள்ளிட்ட பானங்களை எடுத்துக்கொள்வது போன்ற அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறு சுகாதார துறை தெரிவித்துள்ளது.

அத்துடன், அதிக வெப்பம் நிலவும் பிரதேசங்களில், நாளாந்தம் சிறுவர்களை 20 நிமிடங்களாவது நீரில் வைக்குமாறும், இதனூடாக சரும நோய்களை தவித்துக்கொள்ள முடியும் எனவும் ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா குறிப்பிட்டார்.

இன்று கூடுகிறது பாராளுமன்றம்

# பெருந்தோட்ட மக்கள் குறித்து 10 ஆம் திகதி விவாதம்!

கொழும்பு, ஒக. 08

பாராளுமன்றம் இன்று செவ்வாய்க்கிழமை முதல் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை கூடவுள்ளது.

அதற்கமைய, பாராளுமன்றம் கூடும் ஒவ்வொரு நாளும் முற்பகல் 9.30 மணி முதல் முற்பகல் 10.30 மணி வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

8 ஆம் திகதி முற்பகல் 10.30 மணி முதல் பிற்பகல் 5.30 மணி வரை ஆளும் கட்சியால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கு அமைய 2023 ஆம் ஆண்டுக்கான அரையாண்டு அரசிறை நிலைமை அறிக்கை தொடர்பான ஒத்திவைப்பு விவாதம் இடம்பெறவுள்ளது.

9 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணி முதல் பிற்பகல் 5.00 வரை பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மற்றும் கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்ப டவுள்ளன.

அதையடுத்து, பிற்பகல் 5.00 மணிக்கு தனியார் உறுப்பினர் சட்டமூலமான இலங்கை வரி விதிப்பு நிறுவகம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வுள்ளது. அதன் பின்னர் பிற்பகல் 5.00 மணி முதல் பிற்பகல் 5.30 மணி வரை எதிர்க்கட்சியால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கு அமைய சபை ஒத்திவைப்பு வேளையின் போதான விவாதம் இடம்பெறவுள்ளது.

10 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணி முதல் பிற்பகல் 5.30 வரை எதிர்க்கட்சியால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கு அமைய பெருந்தோட்ட சமூகம் தற்போது எதிர்கொள்ளும் சமூக-பொருளாதார பிரச்சினைகள் தொடர்பில் ஒத்திவைப்பு விவாதம் இடம்பெறவுள்ளது.

11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணி முதல் பிற்பகல் 5.00 வரை தனியார் உறுப்பினர் பிரேரணைகள் பிரேரிக்கப்படவுள்ளன.

அதையடுத்து, பிற்பகல் 5.00 மணி முதல் பிற்பகல் 5.30 மணி வரை சபை ஒத்திவைப்பு வேளையின் போதான கேள்விகளுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.



# சப்ரகமுவ மாகாணத்துக்கு சச்சின் டெண்டுல்கர் விஜயம்

கொழும்பு, ஒக. 08

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் சப்ரகமுவ மாகாணத்திலுள்ள பாடசாலை ஒன்றுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

யுனிசெவ் அமைப்பின் தெற்காசியாவில் பிராந்திய நல்லெண்ண தூதராக கடமையாற்றி வரும் சச்சின், இலங்கையின் யுனிசெவ் நிகழ்ச்சிகளை அவதானிக்கும் நோக்கில் இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமாக நேற்று காலை நாட்டை வந்தடைந்தார்.

இந்நிலையில், சப்ரகமுவ மாகாணத்திலுள்ள பாடசாலையொன்றுக்கு விஜயம் மேற்கொண்டார்.

இந்நிகழ்வில் மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்கவும் கலந்துகொண்டார்.

இலங்கையில் கொரோனா பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக சிறுவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்த நிகழ்வில் சச்சின் கலந்துகொள்ளவுள்ளார்.

2013 ஆம் ஆண்டு தெற்காசியாவுக்கான யுனிசெவ் பிராந்திய நல்லெண்ணத் தூதராக சச்சின் நியமிக்கப்பட்டார்.

விளையாட்டு வீரராக இருந்தபோதும், ஓய்வு பெற்ற பின்னரும் அவர் எப்போதும் குழந்தைகளின் உரிமைகளுக்காக குரல் கொடுத்து வருகின்றார். (அ)

# 100 சட்டங்கள் கொண்டுவந்தாலும் குற்றவாளிகள் தண்டிக்கப்படார்!

## சுட்டிக்காட்டுகிறார் மைத்திரிபால

கொழும்பு, ஒக. 08

கொலையாளிகள், கொள்ளையர்கள், ஊழல் மோசடியாளர்களுக்கு தண்டனை வழங்க நாடாளுமன்றத்தில் 100 சட்டங்களை கொண்டு வந்தாலும் அப்படியான தண்டனைகள் எதுவும் வழங்கப்பட போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொலனறுவை அரலங்கவில பிரதேசத்தில் சுதந்திரக்கட்சியின் வெலிகந்த மற்றும் திம்புலாகல தொகுதிகளின் அதிகார சபைகளை ஸ்தாபித்த பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தாஜூதீன் கொலை சம்பந்தமான வழக்கின் உடற்கூறுகள் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியின் அலுவலகத்தில் இருந்தன. 2019 ஆம் ஆண்டுக்கு பின்னர் அவை காணாமல் போயின.

இதன் காரணமாக அந்த கொலை வழக்கின் விசாரணையின் போது, கொலையை நிரூபிக்க முடியாமல் போனது. இதனால், பாராளுமன்றத்தில் 100 சட்டங்கள் கொண்டு வரப்பட்டாலும் வழக்குகள் எதுவும் விசாரிக்கப்பட மாட்டாது.

நான் சுகாதார அமைச்சராக பதவி வகித்தபோது கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியின் அலுவலகத்திற்கு சென்றிருக்கின்றேன்.

சுமார் 15 முதல்20 வருடங்களுக்கு முன்னர் களுத்துறையில் லக்ஷான் என்ற பணக்கார குடும்பத்தைச் சேர்ந்த மாணவன் பாடசாலை விட்டுச் செல்லும்போது பாதாள உலக குழுவினரால் கடத்தப்பட்டது உங்களுக்கு நினைவிருக்கலாம்.

பிள்ளை எங்களிடம் இருக்கின்றது, பிள்ளையை விடுவிக்க பணம் வேண்டும் என கேட்டனர். தந்தை மகனை காப்பாற்ற முயற்சித்தார். வீடு உட்பட சொத்துக்களை விற்றாவது கேட்கும் பணத்தை தருகிறேன், மகனை என்னிடம் ஒப்படையுங்கள் என்று தந்தை கூறினார்.

எனினும் 17 வயதான அந்த மாணவனின் கழுத்தை நெரித்து கொலை செய்து, கழிவறை குழிக்குள் போட்டிருந்தனர்.

பாடசாலை முடிந்து செல்லும்போது பாதாள உலக குழுவினர் மாணவனை கடத்தினர்.

மாணவனின் காலணிகள், அணிந்திருந்த உடை என்பன கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியின் அலுவலகத்தில் தற்போதும் இருக்கின்றன.

நான் சுகாதார அமைச்சராக இருந்தபோது அவற்றை பார்த்தேன். எனினும் அதற்கு பின்னர் என்ன நடந்தது என்பது எனக்கு தெரியாது.

2019 ஆம் ஆண்டு தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியின் அலுவலகத்தில் இருந்த தாஜூதீனின் எலும்புகளுக்கு என்ன நடந்தது என்பது தெரியாது.

இதனால், பாராளுமன்றத்தில் 100 சட்டங்களை நிறைவேற்றினாலும் காணாமல் போனவற்றை மீண்டும் பெறவோ, பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, குற்றத்தை நிரூபிக்கும் தடயங்கள் குற்றவியல் விசாரணை திணைக்களத்திடமோ, கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியின் அலுவலகத்திலோ இல்லை- என்றார். (அ)

# உணவுப்பொருட்களின் விலையை பொது மக்களால் தாங்க முடியாது

## பேராசிரியர் வசந்த அத்துக்கோரள

கொழும்பு, ஒக. 08

பொது மக்களால் தாங்க முடியாத அளவுக்கு உணவுப் பொருட்களின் விலை 128 வீதத்தால் அதிகரித்துள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிபரவியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்தார்.

பணவீக்கம் தொடர்பில் சனத்தொகை புள்ளிவிபர திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அண்மைய அறிக்கைகளில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உணவு அல்லாத பொருட்களின் விலை மட்டம் 87 வீதத்தால் அதிகரித்துள்ளது.

நுகர்வோர் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை மட்டத்தில் சராசரியாக நூற்றுக்கு மூன்று வீத அதிகரிப்பு காணப்படுகிறது.

கொழும்பு நகர எல்லையில் உணவுப் பொருட்களின் விலை 136 வீதத்தால் அதிகரித்துள்ள நிலையில் இதன் காரணமாக பொதுமக்களின் வருமானத்தின் உறுதியான பெறுமதி குறைந்துள்ளதாகவும் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2019ஆம் ஆண்டிற்குப் பின்னர் அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படாததன் காரணமாக மக்களின் வாங்கும் சக்தி வெகுவாகக் குறைந்துள்ளது- என்றார்.

(அ)

# காணாமற்போனோர் பதிவின்படி 75 சதவீத விசாரணைகள் முழுமை!

## அந்த அலுவலகத்தின் தலைவர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக. 08

**1980ஆம் ஆண்டுக்கு முன்னர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பதிவுகளின் படி, 75 சதவீதமான விசாரணைகள் முழுமை பெற்றுள்ளதாக காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் தலைவர் மகேஷ் கட்டுலந்த தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணம் - கல்வியங்காட்டில் அமைந்துள்ள காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தில், இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் ஊடாக மூன்று கட்டமாக பகுப்பாய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

இவற்றில் இன்றைய காலப்பகுதியில் 1980 ஆண்டுக்கு முன்னர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பதிவுகளின்படி 75 சதவீதமான விசாரணைகள் முழுமை பெற்றுள்ளன.

இதில் இரண்டாம் கட்டப் பதிவாக காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தில் வழங்கப்பட்ட முறைப்பாட்டின் தரவுகளின் படி, 2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான விசாரணையினை முன்னெடுத்து வருகின்றோம்.

விசாரணைகளை மேற்கொள்வதற்கு குற்றப்புலனாய்வு திணைக்களம், சட்டமா அதிபரின் அறிக்கைகளையும் பெற்று வருகின்றோம்.

சந்தேகத்திற்கு இடமான கோவையினையும் பெற்றுவருகின்றோம்.

இவற்றில் 14 ஆயிரத்து 988 காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கோவைகளுக்கான விசாரணையை மேற்கொண்டுள்ளோம்.

அத்துடன், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இடர்கால நிவாரணங்களை வழங்குகின்றோம்.

எனினும், இழப்பீடு கொடுக்கப்படவில்லை எனவும் உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கையின் படியே, இழப்பீடு தொடர்பில் ஆராயப்படும் -என்றார்.

(அ)

# பண்டமாற்று ஒப்பந்தத்தின் கீழ் தேயிலை ஏற்றுமதிக்கு திட்டம்!

கொழும்பு, ஒக. 08

இந்தமாதம் முதல் பண்டமாற்று ஒப்பந்தத்தின் கீழ் ஈரானுக்கான தேயிலை ஏற்றுமதியை ஆரம்பிப்பதற்கு இலங்கை எதிர்பார்த்துள்ளது.

2012ஆம் ஆண்டு ஈரானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய்க்காக பண்டமாற்று ஒப்பந்தத்தின்படி, தேயிலை ஏற்றுமதிக்காக 2021 ஆம் ஆண்டு ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது.

இந்தநிலையில், கடந்த ஆண்டு நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலைமைகளை காரணமாக அது தாமதமாகியது.

இந்த விடயம் தொடர்பில், இலங்கை கனியவள கூட்டுத்தாபனத்துடன் விரைவில் ஒப்பந்தம் செய்தப் பின்னர், தேயிலை ஏற்றுமதிக்கு தேவையானவற்றை அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள திட்டமிடப்பட்டப்பட்டுள்ளதாக இலங்கை தேயிலை சபையின் தலைவர் நிராஜ் டி மெல் தெரிவித்தார்.

பண்டமாற்று ஒப்பந்தத்தின் கீழ், 48 மாத காலப்பகுதியில் மாதாந்த அடிப்படையில் சுமார் 5 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான தேயிலையை ஈரானுக்கு ஏற்றுமதி செய்ய இலங்கை உத்தேசித்துள்ளது.

இந்த ஏற்பாடு ஈரானுக்கு செலுத்த வேண்டிய நிலுவையில் உள்ள 251 மில்லியன் அமெரிக்க டொலர் எண்ணெய் பட்டியல் தீர்ப்பதாகும் என நோக்கமாக கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(அ)

# இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் விவசாயிகளின் சம்மேளனம் முறைப்பாடு!

கொழும்பு, ஒக. 08

சமனல வாவியில் இருந்து நீர் விடுவிக்கப்படாமையால் ஆயிரக்கணக்கான விவசாயிகள் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள நிலையில், அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் ஏனைய விவசாயிகளுடன் இணைந்து, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளனர்.

உடவளவை நீர்த்தேக்கத்தின் கீழ் பயிரிடப்பட்டுள்ள 65 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை நீர் பற்றாக்குறையால் முற்றாக அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அந்த சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

உடவளவை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 2 சதவீதம் வரை குறைந்துள்ளதால் சமனல வாவியில் இருந்து நீர் திறந்து விடப்பட்டால், பயிர்செய்கையினை மீட்க வாய்ப்புள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சமனல வாவி நீர்த்தேக்கத்தை நீர் மின் உற்பத்திக்கு பயன்படுத்த வேண்டும் எனக் கூறி அரசாங்கம் அதிலிருந்து நீரை விடுவிக்காதுள்ளது.

குறித்த வாவியில் நீர் மின் உற்பத்தி தற்போது 10 மெகாவோட்டாக குறைந்துள்ளது. விரைவில் பூச்சியமாகும். அப்போது, நீர்மின் உற்பத்தியும் இருக்காது என்பதுடன், நெற்பயிர் செய்கையும் முற்றிலும் பாதிப்படையும் என அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் நீரினை விடுவிப்பதாக வழங்கிய உறுதிமொழியின் அடிப்படையில் விவசாயிகள் நெற்செய்கை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவித்த நாமல் கருணாரத்ன, வாக்குறுதி வழங்கியதன் படி, நீர் வழங்கப்படாமையால் அவர்களின் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

நெற்பயிர்ச் செய்கைக்கு நீர் வழங்கத் தவறியமைக்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை விரைவில் தாக்கல் செய்யத் திட்டமிட்டுள்ளது

அதன் முதற்கட்டமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இன்று முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கருணாரத்ன கூறினார்.

(அ)

# வறட்சியால் நெற்செய்கைக்கு ஏற்படும் சேதங்களை மதிப்பீடு செய்ய பணிப்பு!

கொழும்பு, ஒக. 08

வறட்சி காரணமாக நெற்பயிர்ச் செய்கைக்கு ஏற்பட்டுள்ள சேதங்களை மதிப்பிடும் பணியை ஆரம்பிக்குமாறு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர, விவசாய மற்றும் விவசாய காப்புறுதி சபையின் தலைவருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன் தினம் அனுராதபுரம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, வடமத்திய மாகாண விவசாயிகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

விவசாயிகளுக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை அதிகரிப்பதில் முதன்மை கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தற்போது பயிர் சேதத்திற்கு ஹெக்ரேயருக்கு ஒரு லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கப்படுகின்றது.

(அ)

# 15,000 இற்கும் மேற்பட்ட பெண்கள் மது, போதைப்பொருளுக்கு அடிமை

கொழும்பு, ஒக. 08

இலங்கையில் 15,000 இற்கும் மேற்பட்ட பெண்கள் மதுபானம் மற்றும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளதாகவும், இளைஞர்கள் உட்பட பல இளம் பெண்கள் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குருநாகல் நிர்வாக சிரேஷ்ட பிரதேச செயலாளர் ஆர்.எம். ஜயரத்ன இதனை தெரிவித்தார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் உரையாற்றிய அவர் இதனை கூறினார்.

புனர்வாழ்வுச் சட்டம் எண். 2023/02 இன் கீழ், தீங்கு விளைவிக்கும் போதைப்பொருளுக்கு அடிமையான பெண்களை புனர்வாழ்வளிக்க ஜனவரி மாதம் சட்ட ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டு ள்ளதாக அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

போதைப்பொருளுக்கு அடிமையான பெண்களை புனர்வாழ்வளிக்க முன்னர் சட்ட ஏற்பாடுகள் எதுவும் இல்லை என புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த பத்து ஆண்டுகளில் போதைக்கு அடிமையான சுமார் 28,000 பேர் அரசாங்க அதிகாரிகளால் புனர்வாழ்வளிக்கப்பட்டுள்ளனர்.

50,000 இற்கும் அதிகமானோர் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளதாகவும், மூன்று மில்லியன் இலங்கையர்கள் புகையிலைக்கு அடிமையாகியுள்ளதாகவும் தேசிய ஆபத்தான மருந்து கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் ஷக்ய நாணயக்கார அண்மையில் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

சாரதிகளிடையே மதுபானம் மற்றும் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளமையினால் வீதி விபத்துகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக ஆர்.எம். ஜயரத்ன தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தின் சமீபத்திய புள்ளிவிவரங்களின் படி, 2020 முதல் 2022 வரை வீதி விபத்துகளால் சுமார் 7,172 பேர் உயிரிழந்துள்ளதுடன், 67,687 வீதி விபத்துகள் நிகழ்ந்துள்ளன.

170 இற்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் போதைக்கு அடிமையானவர்கள் என கண்டறியப்பட்டதுடன், கடந்த இரண்டு வருடங்களில் மதுபானம் மற்றும் போதைப்பொருள் தொடர்பான குற்றங்கள் காரணமாக 286 பாதுகாப்புப் படை அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

எனவே, போதைப்பொருள் விற்பனையாளர்களை ஒடுக்குவதற்கும், போதைப்பொருள் தொடர்பான குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கும் அடுத்த மாதம் பாரிய நடவடிக்கையை அமுல்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக ஆர்.எம். ஜயரத்ன மேலும் கூறினார்.

(அ)

# பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் சிலர் பதவி விலகுவர்?

கொழும்பு, ஒக. 08

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விநியோகப் பிரிவில் உயர் பதவி வகிக்கும் நான்கு அதிகாரிகள் தமது இராஜினாமா கடிதங்களை கையளித்துள்ளதாக கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறித்த நான்கு அதிகாரிகளும் தனியார்துறையில் தொழில் புரியும் நோக்கில் இராஜினாமா கடிதத்தைக் கையளித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எரிபொருள் மோசடி தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வரும் நிலையில், குறித்த அதிகாரிகள் இராஜினாமா செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக குறித்த அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், இலங்கையில் எரிபொருள் வியாபாரத்தை ஆரம்பித்துள்ள வெளிநாட்டு நிறுவனமொன்றில் இணைவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தயாராக வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடியின் போது பணம் பெற்றுக்கொண்டு தொழிற்சாலைகள் மற்றும் ஹோட்டல்களுக்கு எரிபொருளை வழங்கியதாகக் கூறப்படும் அதிகாரி ஒருவரும் இராஜினாமா கடிதத்தை கையளித்தவர்களில் அடங்குவதாக குறித்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதனிடையே, குறித்த அதிகாரிகள் பதவி விலகுவதற்கு முன்னர் அவர்களது சொத்துகள் தொடர்பில் கூட்டுத்தாபன மட்டத்திலும் ஏனைய சட்ட அமுலாக்க அமைப்புகளின் ஊடாகவும் விசாரணை நடத்தப்பட வேண்டுமென இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

# ராகுல்காந்தி தகுதிநீக்கத்தை ரத்து செய்ய கோரும் பா.ஜ.க. எம்.பி. அரசியலில் காற்று திசை மாறுகிறதா?

அபிஜீத் சிறிவஸ்தவா

"மோடி" என்ற பெயரைத் தவறாகப் பயன்படுத்தியதாக ராகுல் காந்திக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் அவருக்கு விதிக்கப்பட்டிருந்த தண்டனையை உச்ச நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை, நிறுத்தி வைத்து ஒரு நிவாரணத்தை அளித்துள்ளது.

2019 மக்களவைத் தேர்தலின் போது கர்நாடகாவின் கோலாரில் ராகுல் காந்தி பேசியதற்காக சூரத் நீதிமன்றம் அவருக்கு இந்த ஆண்டு மார்ச் 23 அன்று இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது .

அந்த உத்தரவுக்கு அடுத்த நாளே, இந்த விஷயத்தை அறிந்த மக்களவை செயலகம், ராகுல் காந்தியின் உறுப்பினர் பதவியை ரத்து செய்தது.

ராகுல் காந்திக்கு எதிராக பாரதீய ஜனதா கட்சி செயல்பட்டு வருகிறது என்பதை காட்டும் முதல் வழக்கு இது எனக்கருத முடியாது.

சுமார் இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு, ஸ்வீடனின் வி-டெம் இன்ஸ்டிடியூட் அறிக்கையை மேற்கோள் காட்டி, 'இந்தியா இனி ஜனநாயக நாடு அல்ல," என்று ஒரு செய்தியை கோடிட்டுக் காட்டி ட்விட்டரில் ராகுல் காந்தி எழுதினார்.

இது குறித்து ஆளும் பாரதீய ஜனதா கட்சியின் முக்கியத் தலைவர்களில் ஒருவரான ராகேஷ் சின்ஹா கூறுகையில், ராகுல் காந்தி மேற்கத்திய நாடுகளின் சக்திகளுடன் இணைந்து இந்தியாவின் ஒற்றுமை மற்றும் இறையாண்மைக்கு எதிராக செயல்படுகிறார் என்றார்.

கடந்த ஜூன் மாதம், அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்ட ராகுல் காந்தி அந்நாட்டு தலைநகர் வாஷிங்டன் டிசியில் பேசிய போது, "இந்தியாவில் ஜனநாயகத்திற்காக போராடுவது எங்கள் வேலை," என்று கூறினார்.

மேலும், அமெரிக்காவில் குடியேறிய இந்தியர்கள், இந்தியாவில் ஜனநாயகம் தழைத்தோங்கப் போராடும் தனக்கு ஆதரவளிக்க வேண்டும் என்றும் அழைப்பு விடுத்தார்.

இதற்கு சில மாதங்களுக்கு முன்பு ராகுல் காந்தியின் பிரிட்டன் பயணம் குறித்து இந்தியாவில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அப்போது ராகுல் காந்தி வெளிநாட்டு மண்ணில் இந்திய ஜனநாயகத்தை அவமதித்து விட்டதாக பாஜக குற்றம்சாட்டியது. ஆனால், இந்தக் குற்றச்சாட்டை ராகுல் காந்தி மறுத்துவிட்ட நிலையில், காங்கிரஸ் கட்சியும் நிராகரித்துவிட்டது.

அப்போது பேசிய பாஜக முக்கியத் தலைவர்களில் ஒருவரான முக்தர் அப்பாஸ் நக்வி, "ராகுல் காந்தி வெளிநாடு சென்று இந்தியாவில் ஜனநாயகம் இல்லை என்று கூறுகிறார். தேர்தலில் போட்டியிட்டு, முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவர் எப்படி இதுபோன்ற தவறான தகவல்களைப் பேச முடியும்?" என்று கேள்வி எழுப்பினார்.

**ராகுல் காந்தி மீது ஸ்மிருதி இரானி குற்றச்சாட்டு**

அந்த சுற்றுப்பயணத்திற்குப் பிறகு, ஜூன் மாதமே, ராகுல் காந்தியின் அமெரிக்கப் பயணம் குறித்து மத்திய அமைச்சர் ஸ்மிருதி இரானி பெரிய குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அப்போது அவர் ஒரு செய்தியாளர் சந்திப்புக்கு ஏற்பாடு செய்தார். அந்த சந்திப்பில் பேசிய அவர், ஒரு படத்தைக் காட்டி, "ராகுல் காந்தியின் அமெரிக்கப் பயணத்தின் இந்தப் படத்தில் சுனிதா விஸ்வநாதனுடன் அமர்ந்திருக்கும் பெண்ணுக்கு ஜார்ஜ் சோரஸுடன் தொடர்பு உள்ளது. ஜார்ஜ் சோரஸ் இந்தியாவுக்கு எதிராகச் செயல்படுகிறார் என்பது முன்னரே வெளிவந்துள்ளது," என்று தெரிவித்தார்.

ஜார்ஜ் சோரஸின் அமைப்புடன் தொடர்புடைய ஒருவருக்கு ராகுல் காந்தியின் பாரத் ஜோடோ யாத்திரையுடன் தொடர்பு இருப்பதாகவும் ஸ்மிருதி இரானி கூறினார்.

இத்துடன், "ராகுல் காந்தி அவருடன் என்ன பேசினார் என்பதை நாட்டுக்கு தெரிவிக்க வேண்டும்," என்றும் அவர் வலியுறுத்தினார்.

தற்போது ராகுல் காந்தியின் 2 ஆண்டு சிறைத்தண்டனைக்கு உச்சநீதிமன்றம் தடை விதித்துள்ள நிலையில், பாஜக தரப்பில் இருந்து எந்த பதிலும் வரவில்லை. ஆனால், ராகுல் காந்தியின் தகுதிநீக்கத்தை ரத்து செய்து அவரை நாடாளுமன்றத்தில் நுழைய அனுமதிக்க வேண்டும் என்று நிராஹூவா என்று அழைக்கப்படும் ஆசம்கர் பாஜக எம்.பி. தினேஷ் லால் யாதவ் வலியுறுத்தியுள்ளார்.

எல்லாவற்றுக்கும் மேலாக, பா.ஜ.க.வினர் இதற்கு முன் பெரிதாக எடுத்துக் கொள்ளாத ராகுல் காந்திக்கு, "பப்பு" என்ற அடைமொழியைக் கொடுத்து, தொடர்ந்து



அவரைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதற்கு என்ன காரணம்?

ராகுல் காந்திக்கு எதிரான பாஜகவின் இது போன்ற செயல்பாடுகள், இப்போது அவருக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறதா?

மூத்த பத்திரிக்கையாளர் நீரஜா சவுத்ரி கூறுகையில், "ராகுல் காந்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி நீக்கம் செய்யப்பட்ட விதம் சாதாரண மக்களுக்கு பிடிக்கவில்லை. எதிர்க்கட்சி தலைவர்கள் மீது அமலாக்கத் துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து மக்கள் கவலைப்படவில்லை, ஆனால் ராகுல் காந்தி விஷயத்தில் பொதுமக்களிடம் பாஜகவுக்கு எதிரான மனநிலை ஏற்பட்டுள்ளது என சொல்ல முடியும். எனவே பாஜகவின் இந்த அதீத செயல்பாடு ஏதோ ஒரு இடத்தில் தோற்றுவிட்டது," என்றார்,

**ராகுலை நாட்டின் ஹீரோவாக்கிய பாஜக.**

மறுபுறம், மூத்த பத்திரிக்கையாளர் அசோக் வான்கடே கூறுகையில், "ராகுல் காந்தியை நாட்டின் ஹீரோவாக்கியது பாஜக என்று சொன்னால் அது மிகையாகாது. முன்பு அவரை "பப்பு, பப்பு" என்று சொல்லி பிரதமர் நரேந்திர மோதி அவமானப்படுத்தினார். ராகுல் காந்தி காங்கிரஸ் பிரச்சாரகராக இருந்தால், அது பாஜகவின் வெற்றியை உறுதிப்படுத்தும் என்றும், ராகுல் காந்தி தலைமையில் காங்கிரஸ் கட்சி செயல்பட்டால் பாஜக வாழ்நாள் முழுவதும் வெற்றி பெறும் என்றும் அவர் மீது குறிவைத்துத் தாக்கினார்," என்றார்.

ஆனால் ராகுல் காந்தி தனது நடை பயணத்தின் மூலம் இவை அனைத்திற்கும் பதிலளித்தார். அவர் தீவிர அரசியல் செய்ய விரும்புவதாகவும், கடினமாக உழைக்கும் ஆற்றல் அவருக்கு இருப்பதாகவும், நாட்டு மக்கள் அவரை நேசிக்கிறார்கள் என்றும் அந்த நடைபயணத்தின் போது காட்டினார்.

பாரத் ஜோடோ யாத்திரை முடிந்த உடனேயே மக்களவையில் ஹிண்டன்பர்க் அறிக்கை தொடர்பாக ராகுல் காந்தி மத்திய அரசை சுற்றி வளைத்த ஆக்ரோஷம், வரும் காலங்களில் பாஜகவுக்கு மிகப்பெரிய சவாலாக இருக்கும் என்பதைக் காட்டுவதாக அவர் கூறினார்.

"மோடி" என்ற வார்த்தை தொடர்பாக கோலாரில் ராகுல் காந்தி பேசியதற்கு 4 ஆண்டுகளுக்குப் பிறகு தண்டனை விதிக்கப்பட்டது. அவருக்கு அதிகபட்சமாக 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்தார். இது அவரது அரசியல் எதிர்காலத்தில் பெரும் கேள்விக்குறியாக மாறும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்நிலையில் உச்ச நீதிமன்றத்தின் புதிய உத்தரவு வெளியாகியுள்ளது.

**ராகுல் காந்தி மீண்டும் மக்களவைக்கு வந்தால்?**

மக்களவைக்கு ராகுல் காந்தி திரும்புவது குறித்து மூத்த பத்திரிக்கையாளர் நீரஜா சவுத்ரி கூறுகையில், "மக்களவைக்கு அவர் திரும்பும் பட்சத்தில், அரசியல் ரீதியாக ராகுல் காந்தி மீண்டும் முக்கிய பங்கு வகிப்பார். ஆனால் இது புதிய எதிர்க்கட்சி கூட்டணியான 'இந்தியா'வில் கொந்தளிப்பை ஏற்படுத்தலாம். இந்தியா கூட்டணியைப் பொறுத்தளவில் ராகுல் காந்தியின் வருகை பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தலாம். ஆனால் மீண்டும் ராகுலை நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேற்ற பாஜக முயலும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர் மையப் புள்ளியாக மாறுவார்," என்றார்.

**நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீது ராகுல் காந்தி பேச வாய்ப்பு கிடைத்தால் என்ன நடக்கும்?**

இதுகுறித்து அசோக் வான்கடே கூறியபோது, "பாரத் ஜோடோ யாத்திரை முடிந்த உடனேயே மக்களவையில் ஹிண்டன்பர்க் அறிக்கை குறித்து பேசி ராகுல் காந்தி மத்திய அரசை சுற்றி வளைத்த ஆக்ரோஷம், வரும் காலங்களில் பாஜக எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவாலாக இருக்கும் என்பதைக் காட்டுகிறது. அதே போல் தான் இனிமேலும் ராகுல் காந்தி பேசுவார்," என்றார்.

"இப்போது ராகுல் காந்தி நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு முன் மீண்டும் மக்களவைக்கு வந்தால் மணிப்பூரில் இருந்து வந்திருப்பதாகத் தெரிவித்து, அதே ஆக்ரோஷத்துடன் வார்த்தைகளை முன்வைப்பார். அங்குள்ள நிலவரத்தை பார்த்துவிட்டு வந்துள்ளார்."

இதுபோன்ற சூழ்நிலையில், 2024 தேர்தலில் பாஜக வெற்றி பெற்று மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கு ராகுல் காந்தி மிகப்பெரிய தடையாக இருப்பார்.

"ராகுல் காந்தியை அவமதிக்க பாஜக தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது. அப்படி முயன்றால், அதை ஏதிர்கொள்ளும் மனப்பக்குவமும் அவருக்கு அதிகரித்து வருகிறது. மேலும் பாஜகவின் ஏற்றுக்கொள்ளும் தன்மை குறித்தும் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. இதுவே எதிக்கட்சியினர் குறித்த பிரதமரின் கவலையை அதிகரித்துள்ளது. எங்கெல்லாம் தேசிய ஜனநாயக கட்சியைப் பற்றிய பேச்சு எழுகிறதோ, அங்கெல்லாம் புதிய கூட்டணியான இந்தியா பற்றிய பேச்சுகள் எழுகின்றன."

அசோக் வான்கடே உறுதியாகக் கூறுகிறார், "ராகுல் காந்தி ஒருபோதும் 'பப்பு" அல்ல. அவர் அப்படி உருவாக்கப்பட்டார். இதில் பாஜகவின் கை ஓங்கி இருக்கிறது. காங்கிரஸ் தலைவர்களின் கையும் இதில் இருக்கிறது."

"இன்று, ஹிண்டன்பர்க், மணிப்பூர் போன்ற பிரச்னைகள் தலைதூக்கும்போது, பணமதிப்பிழப்பு, ஜிஎஸ்டி, சீனா, கொரோனா தொற்று, விலைவாசி உயர்வு, விவசாயிகளுக்கு எதிராக சட்டமியற்ற முயன்றது போன்றவை குறித்த கேள்விகள் அனைத்தும் மிகவும் வலிமையாக முன்வைக்கப்படும்."

"காங்கிரஸ் தலைவர் பதவிக்குப் போட்டியிடுவது குறித்த கருத்துகளுக்கு ராகுல் காந்தி முற்றுப்புள்ளி வைத்துவிட்டார். இதற்குப் பிறகும் அவர் குடும்ப அரசியல் செய்கிறார் என விமர்சிக்கப்பட்டு வருகிறார். தற்போதைய நிலையில், ராகுல் காந்திக்கு எதிராகப் பேச பாஜகவிடம் எதுவும் இல்லை. அதனால் இது ஒன்றைத் தவிர வேறு எதையும் அக்கட்சியினர் பேசமுடியாது."

**சட்டமன்றத் தேர்தலும், பாஜகவின் தற்போதைய நிலையும்**

நாட்டில் சில மாநிலங்களில் இந்த ஆண்டு சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. அதில், தற்போது காங்கிரஸ் மற்றும் பாஜகவின் நிலைமை எப்படி இருக்கிறது என்ற கேள்வி பொதுவெளியில் எழுந்துள்ளது.

இது குறித்து நீரஜா சவுத்ரி கூறிய போது, "காங்கிரஸின் மையப் பொறுப்புக்கு ராகுல் காந்தி வந்தவுடன், புதிய கூட்டணியான 'இந்தியா'வின் பலவீனம் வெளிவரும் என்று சிலர் நம்புகின்றனர். ஆனால், பாட்னாவில் நடந்த கூட்டத்தில், எதிர்க்கட்சிகளின் கூட்டணிக்கு முழு ஒத்துழைப்பு அளிக்கப்போவதாக ராகுல் காந்தியும், காங்கிரஸ் தலைவர் கார்கேவும் அப்போதே உறுதியளித்தனர். அதே போல் பிரதமர் பதவிக்கு போட்டியிடும் விருப்பம் எதுவும் தனக்கு இல்லை என்றும், தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு அது குறித்து முடிவு செய்யலாம் என்றும் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்," என்றார்.

தொடர்ந்து பேசியபோது, "ராகுல் காந்தியின் பாரத் ஜோடோ யாத்திரை நிச்சயமாக காங்கிரஸ் தொண்டர்களை உற்சாகப்படுத்தியது. ஆனால், இமாச்சல பிரதேசம் மற்றும் கர்நாடகாவில் காங்கிரஸின் வெற்றிக்கு ராகுல் காந்தி தான் காரணம் எனக்கூற முடியாது. அது அங்குள்ள உள்ளூர் தலைவர்களின் உழைப்புக்குக் கிடைத்த வெற்றி," என்கிறார் நீரஜா சவுத்ரி.

இது குறித்து அசோக் வான்கடே கூறுகையில், "இந்த சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் அதிக மன உறுதியுடன் களமிறங்குகிறது. மத்தியில் காங்கிரஸின் தலைமை வலுவாக இருக்கும் போது, கீழ் மட்டத்திலும் ஒற்றுமை அதிகரிக்கும். அதற்கு நல்ல உதாரணம் இமாச்சல பிரதேசம் மற்றும் கர்நாடகா தேர்தலில் தெரிந்தது." வரும் காலங்களில், 'தெலுங்கானாவில் காங்கிரசின் பலம் அதிகரிக்கும் என்பதையும், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர் மற்றும் ராஜஸ்தானில், பா.ஜ.க.-வின் பலம் அதிகரிக்கும் என்பதையும் நாம் மறுக்கமுடியாது," என்றார்.

# பரஸ்பர நம்பிக்கை இல்லாத பட்சத்தில் நல்லிணக்க செயன்முறை என்பது ஒரு தவறான பிரயோகம்



கலாநிதி ஜெகான் பெரேரா

தேசிய நல்லிணக்க செயன்முறை மற்றும் அதில் இருந்து எழுகின்ற பிரச்சினைகள் மீது அரசாங்கம் கணிசமான கவனத்தைச் செலுத்துகிறது போன்று தெரிகிறது. கடந்த ஐந்து வருடங்களுக்கும் அதிகமான காலமாக உறக்கநிலையில் இருந்துவரும் இந்த செயன்முறைக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது உரத்துக்குரல் கொடுக்கின்றார். 2015 -2018 காலப்பகுதியில் அரசாங்கத்துக்கு அவர் தலைமை தாங்கியபோது இறுதியாக தேசிய நல்லிணக்கத்துக்கான வாய்ப்புக்கள் உச்சநிலையில் இருந்தன. தற்போது உள்ளதை விடவும் அந்த நேரத்தில் நல்லிணக்கச் செயன்முறையில் மிகவும் பரந்தளவிலான பங்கேற்பு இருந்தது.

ஜனாதிபதி விக்கிரமசிங்கவினால் அந்த நேரத்தில் பிரதமர் என்ற வகையில் பாராளுமன்றத்தை அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் பல்வேறு விவகாரங்களுக்குமான பொறுப்பை ஏற்ற அரசியலமைப்பு சபையாக மாற்றக்கூடியதாக இருந்தது. போரின் முடிவுக்கு பின்னரான நிலைவரங்களை கையாளுகின்ற விடயத்தை பொறுத்தவரை காலஞ்சென்ற வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீரவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் சிவில் சமூகத்தின் உறுப்பினர்களைக் கொண்ட கலந்தாலோசனைச் செயலணியும் பல்வேறு பணிகளைப் பொறுப்பெடுத்தனர்.

அதற்கு மாறாக, தற்போதைய நல்லிணக்கச் செயன்முறை ஜனாதிபதி தலைமையில் ஏனைய அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் குறைந்தளவு பங்கேற்புடன் குறுகிய ஒரு செயன்முறையாக காணப்படுகிறது. இது விடயத்தில் குறிப்பாக அரசியலமைப்புக்கான 13 வது திருத்தமும் அதிகாரப் பரவலாக்கமும் அண்மைக்காலத்தில் மிகவும் முக்கியமான இடத்தை பிடித்திருக்கின்றன.

பாராளுமன்றத்தினால் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட விக்கிரமசிங்க நீண்டகால இனப்பிரச்னைக்கு தீர்வைக் காணப்போவதாகவும் எதிர்காலச் சந்ததியின் தோள்களுக்கு அந்த சுமையை விட்டுவைக்கப்போவதில்லை என்றும் உறுதிபூண்டார். இனங்களுக்கு இடையிலான அதிகாரப்பகிர்வுக்கான ஒரு வழிவகையாக மாகாணசபைகள் அமைக்கப்படுவதற்கு வழிவகுத்த 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தப்போவதாகவும் அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளவாறு முழு அளவில் அதிகாரங்களை பரவலாக்கம் செய்யப்போவதாகவும் அவர் கூறினார். ஆனால், இது விடயத்தில் ஜனாதிபதி தன்னந்தனியனாகவே குரல்கொடுத்துக்கொண்டிருக்கிறார். அவரை ஆதரிப்பதற்கு மக்கள் செல்வாக்குடைய தலைவர்களைக் கொண்ட அரசியல் கட்சி ஒன்று இல்லை.

இதனுடன் ஒப்படும்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் 1995 - 2000 காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சமாதான செயன்முறை வேறுபட்டதாக இருந்தது. அவருக்கு அவரது கட்சியினதும் கூட்டரசாங்க பங்காளிக் கட்சிகளினதும் ஆதரவு இருந்தது. அவர்கள் ஐக்கியப்பட்டு ஒரு அணியாக நின்று மக்கள் மத்தியில் செய்தியை கொண்டுசெல்வதில் நாட்டம் காட்டினார்கள். அந்த காலப்பகுதியில் கூடுதல் பெருமளவு மக்கள் அதிகாரப் பரவலாக்கத்துக்கு தங்கள் சம்மதத்தை தெரிவித்தார்கள் என்பதுடன் சமஷ்டிக் கோட்பாடு கூட பெருமளவுக்கு ஏற்புடையதாக இருந்தது. ஆனால் திருமதி குமாரதுங்கவினால் வெற்றிபெற முடியவில்லை.

அவரையும் அவரது அரசாங்கத்தையும் பெருவாரியான சக்திகள் எதிர்த்தன. அந்த நேரத்தில் விடுதலை புலிகள் இயக்கம் அதன் இராணுவ வலிமையில் உச்சநிலையில் இருந்தது. அவர்களின் கொலை முயற்சியில் இருந்து ஜனாதிபதி தெய்வாதீனமாக உயிர்தப்பினார். அவரால் முன்வைக்கப்பட்ட அரசியலமைப்பு வரைவை எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் தீயிட்டுக் கொளுத்தினர். ஆனால் அத்தகைய எதிர்ப்பை தற் போது ஜனாதிபதி விக்கிரமசிங்க முன்னெடுக்கும் நல்லிணக்க முயற்சி எதிர்நோக்கவில்லை.

### தெளிவான நோக்கு

13 வது திருத்தத்துடன் தொடர்புடைய பிரச்னைகளை ஆராய்வதற்கு இவ்வாரம் ஜனாதிபதி விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் உரையாற்றவிருக்கிறார். சட்டங்களை இயற்றுவதற்கும் அவற்றை திருத்துவதற்குமான அரசியலமைப்பு ரீதியான அதிகாரம் பாராளுமன்றத்துக்கு இருக்கிறது என்பதால் தீர்மானங்களை பாராளுமன்றம் எடுக்கவேண்டியது அவசியமாகும் என்றும் அவர் கூறினார். இனப்பிரச்சினையை கையாளுவதில் ஜனாதிபதிக்கு இருக்கும் தெளிவான நோக்கே அவரின் பலமாகும். பிரச்சினைகளை அவர் பல கோணங்களில் பார்க்கிறார். அதனால் 13 வது திருத்தத்துக்கு அப்பால் பல விடயங்களை அதாவது அதிகாரப்பரவலாக்கம், உண்மை கண்டறியும் பொறிமுறை, விடுதலை புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கைதிகளையும் அவர்களின் நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர்களையும் விடுதலை செய்தல் மற்றும் காணி ஆணைக்குழுவொன்றை நிறுவுதல் போன்றவை குறித்து அவர் கவனத்தில் எடுத்திருக்கிறார்.

இவையெல்லாம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கும் கடந்தகால காயங்களை குணப்படுத்துவதற்கும் அத்தியாவசியமான கூறுகளாகும். அரசாங்கம் பிரேரிக்கப்போவது கடந்த காலத்தின் மேலான ஒரு மேம்பாடாகும். செயன்முறையை முன்னோக்கிக் கொண்டுசெல்வதில் ஜனாதிபதிக்கு இருக்கும் உறுதிப்பாடே இவை எல்லாவற்றிலும் மிகவும் நேர்மறையான அம்சமாகும்.





தற்போது ஜனாதிபதியின் யோசனைகளின் மையச்சிந்தனைகள் அவரினாலும் அவருக்கு நெருக்கமான ஆலோசகர்களினாலும் மேம்படுத்தப் பட்டவையாக தெரிகிறது. நல்லிணக்கத் திட்டத்தின் வளர்ச்சி செயன்முறை திறந்ததாகவோ அல்லது ஒளிவுமறைவு அற்றதாகவோ இல்லை. பொலிஸ் அதிகாரம் இல்லாமல் 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியும் என்ற எண்ணம் எந்தவொரு அரசியல் கட்சியினாலும் அல்லது சிவில் சமூக அமைப்பினாலும் எடுக்கப்பட்ட ஒரு நிலைப்பாடல்ல. அது ஜனாதிபதியினதும் பின்னணியில் இருந்து செயற்படும் அவரது குழு உறுப்பினர்களினதும் சொந்த சிந்தனையில் வந்ததாகும்.

அதே போன்றே, இடைக்கால செயலகத்துடன் கூடிய உண்மை கண்டறியும் பொறிமுறையும் - பிரச்னையில் சம்பந்தப்பட்ட சகல தரப்புகளுடனும் (அரசியல் கட்சிகள், பாதிக்கப்பட்டவர்களின் நலன்களுக்காக குரல் கொடுக்கும் குழுக்கள் மற்றும் மனித உரிமைகள் அமைப்புக்கள்) பரந்துபட்ட அல்லது ஒளிவுமறைவற்ற ஒரு கலந்தாலோசனையின் விளைவாக வந்த ஒன்று அல்ல.

தற்போது வெளியில் வந்திருக்கும் சட்டவரைவை நோக்கும்போது உண்மை கண்டறியும் பொறிமுறைக்கு 24 ஜூலை 1983 தொடக்கம் 18 மே 2009 வரை ஒரு கால வரையறை கொடுக்கப்பட்டிருக்கிறது. தொடக்கத் திகதி கறுப்பு ஜூலையில் தமிழர்களுக்கு எதிரான இனவன் செயல்கள் தொடங்கிய தினத்துக்கு அடுத்த நாளாகும். அதே போன்றே முடிவுத்திகதியும் கவனத்துக் குரியதாகிறது. அதாவது அது உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்த தினமாகும்.

இந்த இரு திகதிகளினதும் தெரிவு ஊகத்துக்கு வழிவகுக்கும். ஏன் இந்த திகதிகள் தெரிவு செய்யப்பட்டன? அவை எதை புறந்தள்ளுகின்றன? குறிப்பாக முடிவுத்திகதி உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்த பிறகு கணிசமான காலமாக இடம்பெற்றுவந்த காணாமல்போனோர் விவகாரத்தைப் புறந்தள்ளுகிறது. அந்த காலப்பகுதியில் விடுதலை புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்கள் பலர் அவர்களின் குடும்பத்தவர்களினால் படையினரிடம் கையளிக்கப்பட்டனர். அந்த குடும்பங்கள் பிறகு ஒருபோதும் தாங்கள் கையளித்தவர்களை கண்டதில்லை.

### கலந்தாலோசனை இல்லை

இத்தகைய சூழ்நிலையில், அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளை வெறுமனே யோசனைகளாக மாத்திரமே கருதமுடியும். அவற்றை சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டியவற்றின் இறுதி இணக்கப்பாடுகளாக கருதமுடியாது. அவற்றை கலந்து ஆலோசித்து ஆராய்ந்து திருத்தங்களைச் செய்யவேண்டிய தேவை இருக்கிறது. பொலிஸ் அதிகாரங்களை வழங்காமல் 13 வது திருத்தத்தை முழுமையாக (அரசியலமைப்பின் பிரகாரம்) நடைமுறைப் படுத்தமுடியும் என்ற ஜனாதிபதியின் சிந்தனை இரண்டு முக்காலிகளுக்கு இடையில் இருப்பது போன்றதாகும்.

இது காணி அதிகாரம் போன்ற சர்ச்சைக்குரிய ஏனைய விவகாரங்கள் தொடர்பில் பெரும்பான்மைச் சிங்கள சமூகத்தினதும் அரசியல் கட்சிகளினதும் அக்கறையை கிளறும். அதே வேளை தமிழ் மக்களுக்கும் அவர்களின் கட்சிகளுக்கும் ஏற்புடையதாக இருக்காது. பொலிஸ் அதிகாரம் பரவலாக்கப்படவில்லை என்று அவர்கள் என்று அவர்கள் முறையிடுவார்கள். பொலிஸ் அதிகாரங்களை பரவலாக்கம் செய்தால் அது மாகாணங்களின் முத லமைச்சர்கள் பொலிஸை துஷ்பிரயோகம் செய்யக்கூடிய சூழ்நிலை தோன்றும் என்ற கவலை சரியானதல்ல. மாகாணப் பொலிஸ் மத்திய அரசாங்கத்தினதும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு போன்ற அதன் நிறுவனங்களின தும் முற்றுமுழுதான கட்டுப்பாட்டிலேயே இருக்கும்.

உண்மையில் பொலிஸ் அதிகாரம் பற்றிய தவறான பிரசாரம் பரவலானதாக இருக்கிறது. 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு முன்னதாக பரந்தளவிலான அறிவூட்டல் செயற்திட்டம் ஒன்றை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும். உண்மை கண்டறியும் பொறிமுறை தொடர்பில் அரசாங்கம் இரு கலந்தாலோசனை செயலமர்வுகளை நடத்தியது. ஒவ்வொரு செயலமர்விலும் 60 -- 200 பேர் வரை கலந்துகொண்டனர். இது தவிர அரசாங்கம் சிவில் சமூக தலைவர்கள் அடங்கிய சிறிய குழுக்களுடன் உத்தியோகபூர்வமற்ற கலந்தாலோசனைகளை நடத்தியிருக்கிறது. அத்தகைய கூட்டங்களில் வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி ஒரு அல்லது இரு மணித்தியாலங்கள் கலந்துகொண்டு அரசாங்கம் முன்னெடுக்கவிருக்கும் திட்டங்களை விளக்கிக் கூறியதுடன் சபையோரின் கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

இந்த கூட்டங்களை முறையான பேச்சுவார்த்தைகள் என்றோ கலந்துரையாடல்கள் என்றோ கூறமுடியாது. தாங்கள் முன்னெடுக்க திட்டமிடுகின்ற முற்போக்கான நடவடிக்கைகள் பற்றி விளக்கமளிக்க அரசாங்க உறுப்பினர்களினால் நடத்தப்படும் செயலமர்வுகள் என்றே கருதமுடியும். ஆனாலும் இதை மெச்சவேண்டும். ஏனென்றால் அரசாங்கத்தில் ஜனாதிபதியை தவிர வேறு எவருமோ அல்லது எதிர்க்கட்சிகளோ இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதைப் பற்றி சிந்திக்கவோ அல்லது தீர்வுக்கான வழிமுறையொன்றை முன்வைக்கவோ தயாராயில்லை.

அதனால் தேசியப் பிரச்சினையை தீர்த்துவைப்பதற்கு ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கும் அரசாங்கத்துக்கும் சந்தர்ப்பம் ஒன்றைக் கொடுக்கவேண்டியது முக்கியமானதாகும். எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க மற்றும் டட்லி சேனநாயக்க தொடக்கம் முன்னைய அரசாங்க தலைவர்களினால் இந்த பிரச்சினையை தீர்க்கமுடியாமல் போய்விட்டது. தற்போதைய அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை அவசர அவசரமாக நடத்தி புதிய பொறிமுறைகளை அமைத்துவிடக்கூடாது. விவகாரங்களை முறையாகக் கையாளுவதற்கு பெருமளவுக்கு தீவிரமான கலந்தாலோசனைகளை நடத்தவேண்டிய தேவை இருக்கிறது.

இத்தடவை விவகாரங்களை சரியான முறையில் கையாள அரசாங்கம் விரும்புகிறது என்று சிவில் சமூக குழுக்களுடனான சந்திப்பின்போது ஒரு தடவை வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி கூறினார். சரியாக கையாளுவது என்பதன் அர்த்தம் அரசியல் கட்சிகள், சிவில் சமூகம் மற்றும் கல்விச்சமூகம் உட்பட சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் ஆழமான கலந்தாலோசனைகளை நடத்தி, நீதிக்கும் சமத்துவத்துக்குமான தங்களின் கோரிக்கையில் உறுதியாக இருந்துவரும் தமிழ் மக்களின் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் இணக்கப்பாட்டை பெறுவதாகும்.

# கல்முனையில் சமூக செயல்பாட்டு சான்றிதழ் கற்கைநெறி ஆரம்பம்

காரைதீவு, ஓக. 08

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பு ஏற்பாடு செய்த மூன்று மாத கால சமூக செயற்பாடு சான்றிதழ் கற்கை நெறி பிரதி சனி, ஞாயிறு தினங்களில் கிரமமாக நடைபெற்று வருகிறது.

இதன் அங்குரார்ப்பண வைபவம் கடந்த 22ஆம் திகதி சனிக்கிழமை பெண்கள் வலையமைப்பின் தலைவி திருமதி தியாகேஸ்வரி ரூபன் தலைமையில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

வலையமைப்பின் பொதுச்சபை இணைப்பாளர் திருமதி கலைவாணி தயாபரனின் ஒழுங்கமைப்பில் வகுப்புகள் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்று வருகின்றன.



நேற்று முன்தினம் ஞாயிறு முழு நேர செயலமர்வை சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா நடத்தியிருந்தார்.

ஊடகம் மற்றும் சமூக வலைத்தளங்களின் தாக்கம் தொடர்பாக அவரது முன்வைப்பு அமைந்திருந்தது.

வலையமைப்பின் செயற்பாடு இடம் பெறும் மாவட்டத்தின் ஆறு பிரதேசங்களில் இருந்து நாற்பது யுவதிகள் இப் பயிற்சி நெறியில் கலந்து கொண்டனர்.

## வங்குரோத்துநிலைக்கு காரணமானோரின் பட்டியலைத் தயாரிக்குமாறு அறிவுறுத்தல்!

கொழும்பு, ஓக. 08

நாட்டின் வங்குரோத்து நிலைக்கு காரணமான நிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும் அவர்களின் சார்பில் சாட்சியமளிக்கக்கூடிய நபர்களின் பட்டியலைத் தயாரிக்குமாறு இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பொருளாதாரத்துறை தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் வங்குரோத்து நிலைக்கான காரணங்களை கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்ற விசேட குழுவுடனான கலந்துரையாடலின் போதே இவ்வாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்காலத்தில் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படாமல் தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் முன்னுரிமை ஆவணமொன்றை தயாரிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த அறிக்கையினை ஒரு வாரத்திற்குள் வழங்குமாறும் பல்கலைக்கழகங்களின் பொருளாதாரத்துறை தலைவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

விஞ்ஞான ரீதியில் இந்த நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு சென்ற உண்மைகள் மற்றும் அதற்கு காரணமானவர்கள் குழுவின் முன் கொண்டுவரப்பட்டு உண்மைகள் ஆராயப்படும் என நாட்டின் வங்குரோத்து நிலைக்கான காரணங்களை கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்ற விசேட குழுவின் தலைவர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

(அ)

# மாணவர் துஷ்பிரயோகம்; ஆசிரியர் பொலிஸில் சரண்

நிந்தவூர், ஓக. 08

அரச பாடசாலை ஒன்றில் மாணவன் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபரான உடற்கல்வி ஆசிரியர் நிந்தவூர் பொலிஸில் சரணடைந்துள்ளார்.

தலைமறைவாகி இருந்த சந்தேக நபரான உடற்கல்வி ஆசிரியரை பொலிஸார் தேடி வந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை தனது சட்டத்தரணி ஊடாக பொலிஸில் சரணடைந்துள்ளதாகவும் சந்தேக நபரை நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைக்காக ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ. எம். நஜீம் உறுதிப்படுத்தியுள்ளார்.

கடந்த 2 ஆம் திகதி பாடசாலை ஒன்றில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகி மாணவன் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் சந்தேக நபரான ஆசிரியர் தலைமைறைவாகி இருந்தார்.

குறித்த சந்தேக நபரான ஆசிரியர் அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பகுதியில் உள்ள பிரபல அரச பாடசாலை ஒன்றில் உடற்கல்வி ஆசிரியராக செயற்பட்டு வந்துள்ளார்.

அவர் கடந்த ஜூலை மாதம் 19 ஆம் திகதி விளையாட்டு அறையில் வைத்து பாலியல் ரீதியாக மாணவனை துஷ்பிரயோக முயற்சிக்கு உட்படுத்தினார் என அதிபரிடம் முறையிடப்பட்டிருந்தது.

சம்பவம் இடம்பெற்று மறுநாள் பாதிக்கப்பட்ட மாணவன் அதிபரிடம் முறையிட்டுள்ளதுடன் இரு வாரங்கள் கழிந்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் மூடி மறைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என பாதிக்கப்பட்ட மாணவனின் தாயார் தெரிவித்திருந்தார்.

இதனை அடுத்து இச் சம்பவம் குறித்து நிந்தவூர் பொலிஸார் குறித்த மாணவனிடம் வாக்குமூலம் ஒன்றை இரு தடவை பெற்றுச் சென்றிருந்தனர்.

சந்தேக நபரான ஆசிரியர் தொடர்ந்தும் தலைமறைவாகி இருந்தார்.

(அ)






# குரூரமான திராய்க்கேணி படுகொலைக்கு நீதியும் நிவாரணமும் கிடைக்க வேண்டும்!

## 33 ஆவது படுகொலை நினைவேந்தலில் ஜெயசிறில் கோரிக்கை

காரைதீவு, 08

**"கடந்த 33 வருடங்களுக்கு முன்பு ஏதுமறியாத 54 அப்பாவித் தமிழ் மக்கள் வெட்டியும் கொத்தியும் கொடூரமாக குரூரமாக கொலை செய்யப்பட்டார்கள். இதுவரை அப்படுகொலைக்கு நீதியான விசாரணையோ எந்த நிவாரணமோ கிடைக்கவில்லை. அதனை இந்த அரசாங்கம் பெற்றுத்தர வேண்டும்."**




-இவ்வாறு திராய்க்கேணி படுகொலையின் 33ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம் பெற்ற போது கலந்துகொண்ட இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் கோரிக்கை விடுத்தார்.

திராய்க்கேணி படுகொலையின் 33ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை சமூக செயற்பாட்டாளர் துரையப்பா காத்தவராயன்(காந்தன்) தலைமையில் திராய்க்கேணி சித்திவிநாயகர் ஆலய முன்றலில் நடைபெற்றது.

அங்கு அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் சமூக செயற்பாட்டாளர் தா. பிரதீபன் உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள்.

அங்கு ஜெயசிறில் மேலும் பேசுகையில்-

எதுவும் அறியாத அப்பாவி தமிழ் மக்களை 33 வருடங்களுக்கு முன்பு காட்டுமிராண்டித்தனமான சஹ்ரானை போன்ற ஒருசில முஸ்லிம் காடையர்கள் அரச படையுடன் சேர்ந்து இந்த இனப்படுகொலையை நடத்தினர் .

அந்த நிலத்தை அபகரிக்க வேண்டும் என்ற ஒரே நோக்குடன் இந்த படுகொலைகள் நிகழ்த்தப்பட்டு இருக்கின்றன.

தொடர்ந்து வந்த அரசாங்கங் கள் இந்த மக்களின் வாழ்வாதாரத்துக்கோ எதுவுமே செய்யாமல் புறக்கணித்து வந்திருக்கின்றன.

அதனால் அவர்கள் இன்றும் பலமின்றி அடிமையாக வாழ்ந்து வருகிறார்கள்.

எனவே இந்த இனப்படுகொலைக்கு நீதியான விசாரணை வேண்டும். அவர்களுக்கு நீதி நிவாரணம் கிடைக்கவேண்டும்.

இங்கு இடம் பெற்ற குரூரமான இப்படியான படுகொலைகள் இனியும் நடந்து விடக்கூடாது என்பதற்காக தனது அப்பா, பாட்டன், பாட்டி, பூட்டி ஆகியோர் எவ்வாறு கொலை செய்யப்பட்டார்கள் என்பதனை இன்றைய இளம் சமுதாயமும் அறிய வேண்டும் என்பதற்காக இதனை நாங்கள் செய்கின்றோம். என்றார்.

33 வருடங்களுக்கு முன்பு காட்டுமிராண்டித்தனமாக படுகொலை செய்யப்பட்ட மக்களின் உறவுகள் கதறியழுது கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.

(அ)

# ரூ. ஒன்றரை மில்லியன் பெறுமதியான நூல்களை வழங்கியது ஆசிய மன்றம்



அக்கரைப்பற்று, ஒக. 08


இலங்கை ஆசிய மன்ற பூரண அனுசரணையில் சுமார் ஒன்றரை மில்லியன் ரூபா பெறுமதியான பாடசாலை வாசிகசாலை மற்றும் மாணவர்களுக்கான கடந்த கால வினாப்பத்திரத் தொகுப்பு நூல்கள் நேற்று முன்தினம் மருதமுனை அல்- மனார் மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கப்பட்டது.

ஆசிய மன்ற முன்னாள் நிகழ்ச்சித்திட்ட ஆலோசகரும், இலங்கை உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளனம் மற்றும் சி.ஜி.ஐ. நிறுவனம் ஆகியவற்றின் நிகழ்ச்சித்திட்ட ஆலோசகருமான எம்.ஐ.எம்.வலீத் இலங்கை ஆசிய மன்றத்திடம் முன்வைத்த கோரிக்கைக்கமைய நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருது, கல்முனை, கல்முனை தமிழ், சம்மாந்துறை கோட்டங்களைச் சேர்ந்த 16 பாடசாலைகளுக்கு இந்த நூல்கள் அவரின் தலைமையில் ஆசிய மன்ற புத்தகங்கள் நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர் அன்டன் டீ நல்லதம்பியின் பிரசன்னத்துடன் பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.எஸ்.நஜீம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதுடன், ஏனைய அதிதிகளாக கல்முனை வலயக்கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளரும், கோட்டக்கல்வி அதிகாரியுமான ஏ.பி. பாத்திமா நஸ்மியா சனூஸ், நிந்தவூர் கோட்டக்கல்வி அதிகாரி எம்.சரிபுதீன், காரைதீவு கோட்டக்கல்வி அதிகாரி ஜே.டேவிட், கல்முனை தமிழ்ப்பிரிவு கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.சரவணமுத்து , ஆசிய மன்ற திட்ட இணைப்பாளர் எம்.ஐ.ஜாவாஹிர், பாடசாலை அதிபர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலைகளின் அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள், ஆசிய மன்ற அதிகாரிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# 'இந்து மதம் ஒரு பார்வை' நூல் வெளியீட்டுவிழா



மட்டக்களப்பு, ஒக. 08

இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு மாநில பொதுமுகாமையாளரும் எழுத்தாளருமான ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் எழுதிய "இந்து மதம் ஒரு பார்வை" என்ற நூல் வெளியீட்டுவிழா அண்மையில் நடைபெற்றது.

ராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு, சுவாமி விவேகானந்தரின் இலங்கை வருகையை ஒட்டி 125 ஆண்டுகள் பூர்த்தியை கொண்டாடும் முகமாக இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

உலகளாவிய ராமகிருஷ்ண மடம் மற்றும் ராமகிருஷ்ணமிஷனின் துணைத் தலைவரும் சென்னை ராமகிருஷ்ண மடத்தின் தலைவருமான அதிவண. ஸ்ரீமத் சுவாமி கௌதமானந்த ஜீ மகராஜ் இந்த நூலை வெளியிட்டு வைத்தார்.

இந்த நிகழ்வில் ராமகிருஷ்ண மிஷன் கொழும்பு முன்னாள் தலைவர் சுவாமி சர்வரூபானந்தாஜி மகராஜ் மற்றும் ராமகிருஷ்ண மிஷன் கொழும்பு உப தலைவர் சுவாமி அக்ஷராத்மானந்தஜி மகராஜ் மற்றும் துணை பொது தலைவரின் செயலாளர் சுவாமி யாதவேந்ரானந்தஜி மற்றும் சுவாமி சுரார்சிதானந்தஜி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கிழக்கு ஆளுநரை பாராட்டிய பிரதமர்

திருமலை, ஒக 08

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை,மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களின், உணவு பாதுகாப்பு கூட்டம் கடந்த இரண்டு நாட்களாக பிரதமர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், அமைச்சர்கள், அந்ததந்த மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது, கடந்த 5ஆம் திகதி ஆளுநர் செயலகத்திற்கு விஜயம் செய்த பிரதமர், செந்தில் தொண்டமான் ஆளுநராக பொறுப்பேற்று இரண்டு மாதக் காலங்களில் முன்னெடுத்த வேலைத்திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

கிழக்கு மாகாணத்தில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக 700 ஆசிரியர் நியமனம், 5000 இளைஞர்களுக்கு ஐ.ரி. வேலைவாய்ப்பு, இந்திய அரசிடமிருந்து 2371 மில்லியன் கடனற்ற நிதியுதவி, ஜப்பான் அரசுடன் இணைந்து அருகம்பேவில் உலாவுதல் ஆரம்பித்தல், சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரித்தல், கிழக்கு மாகாணத்திற்கு முதல் முறையாக கோர்டிலா குரூஸ் கப்பலை வரவழைத்தமை, ஆயிரத்திற்கும் மேற்பட்ட காணி உரிமை பெற்றுக்கொடுத்தமை, கரையோர துப்புரவு வேலைத்திட்டத்தின் ஊடாக ஐம்பதாயிரம் பிளாஸ்ரிக் கழிவு பொருட்கள், ஒரு இலட்சம் பிளாஸ்ரிக் அல்லாத கழிவு பொருட்கள் அகற்றப்பட்டு கடற்கரைகள் சுத்தம் செய்யப்பட்டமை, சட்ட ஒழுங்கை சீராக செயற்படுத்தல் போன்ற பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை குறுகிய காலத்தில் வெற்றிகரமாக முன்னெடுத்தமைக்கு பாராட்டுக்களை தெரிவித்துடன், ஆளுநர் மத சார்பற்ற வகையில் நியாயமான முடிவுகளை அனைவருக்கும் உதவும் வகையில் செயற்படுவதாகவும் அறிய கூடியாதாக உள்ளது எனவும் தெரிவித்தார்.



மட்டக்களப்பு மாவட்ட மீளாய்வுக் கூட்டத்தில் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் நியாமான விடயங்கள் புறக்கணிக்கப்பட்டன. மக்கள் பிரதிநிதியாக குரல் எழுப்பியும் எந்த பிரச்னைகளுக்கும் தீர்வு எட்டப்படவில்லை. ஆனால் ஆளுநராக செந்தில் தொண்டமான் பொறுப்பேற்ற பிறகு, ஓரளவேனும் நியாயமான முறையில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடத்தக்கூடியதாக உள்ளது என சுட்டிக்காட்டினார்.

(அ)

# ஆயுத உற்பத்தியை அதிகரிக்க உத்தரவு

## வட கொரிய ஜனாதிபதி விடுத்தார்

பியொங்யாங், ஒக. 08

**நாட்டின் பாதுகாப்பு திறன்களை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றும் விதமாக ஆயுத தொழிற்சாலைகளில் உற்பத்தியை அதிகரிப்பதற்கான அறிவுறுத்தல்களை விடுத்துள்ளார் வட கொரிய ஜனாதிபதி.**

வட கொரியாவின் எச்சரிக்கையை மீறி தென் கொரியா அமெரிக்க படைகளுடன் இணைந்து போர்ப் பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

எனவே தென் கொரியாவுக்கு மிரட்டல் விடுக்கும் வகையில் வட கொரிய தொடர்ந்து ஏவுகணைச் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிலையில் வட கொரி



யாவின் முக்கிய ஆயுத தொழிற்சாலைகளை அந்த நாட்டின் ஜனாதிபதி கிம் ஜோங் உன் நேரில் சென்று ஆய்வு செய்தார்.

ரொக்கெட் லொஞ்ச்சர்கள், ஏவுகணைகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் ஆகிய வற்றை ஆய்வு செய்த அவர், நாட்டின் பாதுகாப்பு திறன்களை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றும் விதமாக ஆயுத தொழிற்சாலைகளில் உற்பத்தியை அதிகரிப்பதற்கான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். (அ)



# தரம் 3 இற்கு பின் மாணவிகள் கல்வியைத் தொடர முடியாது!

## தலிபான்கள் அறிவிப்பு

காபூல், ஒக. 08

ஆப்கானிஸ்தானில் தரம் மூன்றிற்கு பின்னர் மாணவிகள் கல்வியை தொடர முடியாது என தலிபான் அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன், உடற்பயிற்சி நிலையங்கள், சிகையலங்கார நிலையங்கள், பூங்காக்கள் மற்றும் சந்தைகள் போன்ற பொது இடங்களுக்கு பெண்கள் வெளியில் செல்லும் போது தமது முகங்களை மறைப்பது கட்டாயமாகும் எனவும் தலிபான் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை, ஆப்கானிஸ்தானின் சில மாகாணங்களில் 10 வயதிற்கு மேற்பட்ட மாணவிகளுக்கு கல்வியை தொடர தடைவிதிக்குமாறு தலிபான் அரசாங்கத்தின் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ)

# கிழக்கு சீனாவில் நேற்று நிலஅதிர்வு

## 21 பேர் காயம்



பீஜிங், ஒக. 08

சீனத் தலைநகர் பீஜிங்கிலிருந்து தெற்கே 300 கிலோமீற்றர் (185 மைல்) தொலைவில் உள்ள டெசோ நகருக்கு அருகே நேற்று அதிகாலை 2:33 மணியளவில் 5.5 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டதாக சீன நிலநடுக்க வலையமைப்பு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் 126 வீடுகள் இடிந்து விழுந்து 21 பேர் காயமடைந்தனர் என்று சீன மத்திய தொலைக்காட்சி மற்றும் பிற செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

சாத்தியமான சேதம் குறித்து ரயில் பாதைகள் ஆய்வு செய்யப்பட்டு வருவதாக அதிகாரபூர்வ சீன செய்தி சேவை தெரிவித்துள்ளது. (அ)

# புலம்பெயர்ந்தோர் படகு கடலில் மூழ்கியதில் நான்கு பேர் மரணம்!

துனிஸ், ஒக. 08

துனிசியாவின் கெர்கென்னா தீவில் புலம்பெயர்ந்தோர் படகு கடலில் மூழ்கியதில் நான்கு பேர் உயிரிழந்தனர்.

அத்துடன், 50 இற்கும் அதிகமானோரை காணவில்லை என அந்த நாட்டின் நீதித்துறை சார்ந்த ஒருவர் தெரிவித்ததாக அந்தநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

துனிசிய கடலோர காவல் படை இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூலை மாதம் 20ம் திகதி வரை கடலில் மூழ்கிய 901 பேரின் உடலங்களை மீட்டுள்ளதாக அந்த நாட்டின் உள்துறை அமைச்சர்



கடந்த மாதம் குறிப்பிட்டிருந்தார்.

வட ஆபிரிக்கா நாடான துனிசியா இந்த ஆண்டு வரலாறு காணாத புலம்பெயர்தோரின் உயிரிழிப்புகளை சந்தித்துள்ளது.

ஆபிரிக்காவில் இருந்து இத்தாலிய கடற்கரைக்கு செல்லும் புலம்பெயர்ந்தோரின் படகுகள் அடிக்கடி கடலில் விபத்துக்குள்ளாகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மீண்டும் எம்.பி. ஆகிறார் ராகுல்!

புதுடில்லி, ஒக. 08

ராகுல் காந்தியின் தகுதி நீக்க உத்தரவை திரும்ப பெற்றது மக்களவை செயலகம். அவதூறு வழக்கில் ராகுல் காந்தியின் தண்டனை நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் தகுதி நீக்க உத்தரவு திரும்பப் பெறப்பட்டது.

மோடி குடும்ப பெயர் தொடர்பான அவதூறு வழக்கில் சூரத் நீதிமன்றம் விதித்த இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனையை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் ராகுல் காந்தி மேல் முறையீடு செய்திருந்தார்.

இம்மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம் ராகுல் காந்திக்கு விதிக்கப்பட்ட தண்டனையை கடந்த வெள்ளிக்கிழமை நிறுத்தி வைத்து உத்தரவிட்டது.

இதையடுத்து தகுதி நீக்க உத்தரவை ரத்து செய்து ராகுல் காந்தியை மீண்டும் வயநாடு தொகுதி எம்.பியாக அறிவிக்கக்கோரி எதிர்க்கட்சிகள் தரப்பில் வலியுறுத்தப்பட்டது. இந்நிலையில் ராகுல் காந்தியின் தகுதி நீக்க உத்தரவை மக்களவை செயலகம் திரும்ப பெற்றது. வயநாடு எம்.பியாக ராகுல் காந்தி தொடர்வார் என அறிவிக்கப் பட்டது.



இதையடுத்து இன்று நடைபெறும் பாராளுமன்ற கூட்டத் தொடரில் ராகுல் காந்தி பங்கேற்பார். (அ)

# காட்டுக் காளான் சாப்பிட்ட 3 பேர் ஆஸியில் உயிரிழப்பு



கான்பரா, ஒக. 08

அவுஸ்திரேலியாவின் தெற்கு கிப்ஸ்லாந்தில் காட்டு காளானை சாப்பிட்டதால் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

66 மற்றும் 70 வயதுடைய இரண்டு சகோதரிகள் ஒகஸ்ட் 4 ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

70 வயதான ஒருவர், ஒகஸ்ட் 5 ஆம் திகதி வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

68 வயதான ஒருவர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருவதாக அவுஸ்திரேலிய ஊடங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ)

# சிலி நாட்டு கடற்கரையில் ஒதுங்கிய நீல திமிங்கலம்

சன்ரியாகோ, ஒக. 08

கடல்வாழ் உயிரினங்களில் மிக பெரியதாக நீல திமிங்கலம் இருந்து வருகிறது.

ஆழமான கடற்பகுதியில் இது வாழ்ந்து வருகிறது. இந்த நிலையில் சிலி நாட்டின் அன்குட் தீவு பகுதியில் பிரம்மாண்டமாக காட்சி அளிக்கும் நீல திமிங்கலம் கரை ஒதுங்கியுள்ளது.

இதை பார்த்த பொது மக்கள் அதிர்ச்சி அடைந்தனர். அந்த திமிங்கலம் எப்படி கரைக்கு வந்தது என்பது தெரியவில்லை. அந்த கடற்கரை பகுதியில் கப்பல் போக்குவரத்து நடந்து வரு கிறது.

இதனால் கப்பலில் மோதி அது கரைக்கு வந்ததா? அல்லது பருவநிலை மாற்றம் காரணமாக ஒதுங்கியதா? என்பது தெரிய வில்லை.

இது தொடர்பாக முழுமையான விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். (அ)



### மகளிர் உலகக் கிண்ண உதைபந்து

# நெதர்லாந்து அணி காலிறுதிக்கு தகுதி

சிட்னி, ஒக. 08

உலகக் கிண்ண மகளிர் உதைபந்தாட்டப் போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் தென்னாபிரிக்க அணியை நெதர்லாந்து வீழ்த்தியது.

உலகக் கிண்ண மகளிர் உதைபந்தாட்டப் போட்டி அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளில் நடைபெற்று வருகிறது. தற்போது காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டங்கள் நடைபெற்றுவருகின்றன.

நேற்று முன்தினம் சிட்னியில் நடந்த போட்டியில் நெதர்லாந்து தென்னாபிரிக்க அணிகள் மோதின. இதில் நெதர்லாந்து 2-0 என்ற கோல் கணக்கில் தென்னாபிரிக்காவை வீழ்த்தி காலிறுதிச் சுற்றில் கால் பதித்தது.

நெதர்லாந்து வீராங்கனைகள் ஜில் ரூர்ட், லினெத் பீரன்ஸ்டெயின் ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர். (ஐ)





# ஒருநாள் உலகக் கிண்ணம் ஆஸி. அணி அறிவிப்பு!

சிட்னி, ஒக. 08

எதிர்வரும் ஒருநாள் கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடருக்கான 18 வீரர்கள் அடங்கிய முதற்கட்ட அணியை அறிவித்துள்ளது கிரிக்கெட் அவுஸ்திரேலியா.

உலகக் கிண்ணத் தொடரில் ஆஸி. அணியை வழிநடத்துகிறார் கம்மின்ஸ்.

இந்தியாவில் வரும் ஒக்ரோபர் 5ஆம் திகதி முதல் நவம்பர் 19ஆம் திகதி வரை 50 ஓவர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் போட்டியை நடத்தும் இந்தியா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, இலங்கை, பங்களாதேஷ் ஆப்கானிஸ்தான், நெதர்லாந்து உள்ளிட்ட 10 அணிகள் விளையாட உள்ளன.

இந்த நிலையில் 18 வீரர்கள் அடங்கிய முதல்கட்ட அணியை ஆஸி. அறிவித்துள்ளது. ஐ. சி. சி. உத்தரவின்படி செப்ரெம்பர் 28ஆம் திகதிக்கு முன்னதாக இந்த அணி 15 வீரர்கள் என்ற அளவில் குறைக்கப்படும்.

அணி விவரம்: கம்மின்ஸ் (தலைவர்), அபொட், அஷ்ரன் ஏகர், அலெக்ஸ் ஹாரி, நதன் எல்லிஸ், கமரூன் கிறீன், அரோன் ஹார்டி, ஜோஷ் ஹேசில்வூட், டிராவிஸ் ஹெட், ஜோஷ் இங்கிலிஸ், மிட்செல் மார்ஷ், மிட்செல் ஸ்டார்க், கிளென் மக்ஸ்வெல், தன்வீர் சங்கா, ஸ்டீவ் ஸ்மித், மார்கஸ் சிட்டோனிஸ் , டேவிட் வோர்ணர், அடம் ஸம்பா.

# மேற்கிந்தியாவுடனான ரி-20; இந்தியாவுக்கு 2ஆவது தோல்வி!

கயானா, ஒக. 08

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது இருபது - 20 கிரிக்கெட் போட்டியையும் மேற்கிந்தியத்தீவுகள் அணி வெற்றி கொண்டது.

இந்திய கிரிக்கெட் அணி மேற்கு இந்தியத் தீவுகளில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையிலான 5 போட்டிகள் கொண்ட இருபது -20 கிரிக்கெட் தொடரின் முதல் ஆட்டத்தில் இந்திய அணி 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. 2ஆவது போட்டி கயானாவில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இதன்படி களமிறங்கிய இந்திய அணி 20 ஓவரில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 152 ஓட்டங்கள் எடுத்தது.

பொறுப்புடன் ஆடிய திலக் வர்மா அரைச் சதம் அடித்தார். அவர் 51 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மற்றவர்களில் இஷான் கிஷன் 27, ஹர்திக் பாண்ட்யா 24 ஓட்டங்கள் எடுத்திருந்தனர்.

இதையடுத்து, 153 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு ஹார்திக் பாண்ட்யா முதல் ஓவரே அதிர்ச்சி வைத்தியம் அளித்தார்.

முதல் பந்தில் பிரண்டன் கிங்கையும் நான்காம் பந்தில் சார்ள்ஸையும் ஆட்டமிழக்க செய்தார். கைல் மேயர்ஸூம் விரைவாகவே வெளியேறினாலும், நிகோலஸ் பூரண் அதிரடி காண்பித்தார்.



வான வேடிக்கை காண்பித்த அவரின் அதிரடி துடுப்பாட்டத்தால் மேற்கிந்தியத் தீவுகள் அணி ஓட்டங்கள் சேகரிப்பில் தீவிரம் காட்டியது. 40 பந்துகளில் 67 ஓட்டங்கள் சேர்த்து அவர் விக்கெட்டை பறிகொடுத்த பின் அந்த அணி விக்கெட் சரிவை எதிர்கொண்டது.

ஹோல்டர், ஹெட்மேயர், ரொமாரியோ ஷெப்பர்ட் ஆகியோர் அடுத்தடுத்து வெளியேற, இந்திய அணியின் கை ஓங்க ஆரம்பித்தது. எனினும், அகேல் ஹொசின் மற்றும் அல்சாரி ஜோசப் இணைந்து அணியை சரிவில் இருந்து மீட்டதுடன் வெற்றிபெறவும் வைத்தனர்.

இதன்மூலம் 18.5 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 155 ஓட்டங்கள் எடுத்து இருபது -20 தொடரில் இரண்டாவது வெற்றிபெற்றுள்ளது.

அகேல் ஹொசின் 16 ஓட்டங்களும், அல்சாரி ஜோசப் 10 ஓட்டங்களும் ஆட்டமிழக்காமல் எடுத்து அணியின் வெற்றிக்கு உதவினர்.

இந்திய அணி தரப்பில் அதிகபட்சமாக ஹார்திக் பாண்டியா 3 விக்கெட்களும், சஹால் 2 விக்கெட்களும் எடுத்தனர். (ஐ)

# நடப்பு சம்பியன் அமெரிக்காவை வெளியேற்றியது சுவீடன்!



சிட்னி, ஒக. 08

மகளிர் உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் நடப்பு சம்பியனான அமெ ரிக்கா - சுவீடனிடம் தோல்வி கண்டு போட்டியிலிருந்து வெளியேறியது.

இந்தப் போட்டி முதலில் கோலின்றி சமநிலையில் முடிவடைந்தது.

சமநிலை தவிர்ப்பு உதை வாய்ப்பில் சுவீடன் 5-4 கோல் கணக்கில் வென்று, 4 முறை சம்பியனான அமெரிக்காவுக்கு அதிர்ச்சி அளித்தது.

உலகக் கிண்ண வரலாற்றில் அமெரிக்கா, அரையிறுதிக்கு முன்பாக வெளியேறுவது இதுவே முதன்முறையாகும். தொடர்ந்து 2 முறை சம்பியன் வென்ற அந்த அணியின் ‘ஹட் ரிக் சம்பியன்’ கனவை சுவீடன் தகர்த்தது. அடுத்ததாக சுவீடன் தனது காலிறுதியில் ஜப்பானை எதிர்கொள்கிறது.

# அடுத்த 10 வருடங்கள் ஐ.தே.கவின் ஜனாதிபதி!

## கூறுகின்றார் நவீன் திஸாநாயக்க



கொழும்பு, ஓக. 08

**அடுத்த 10 வருடங்களுக்கு நாட்டின் ஜனாதிபதியாக ஐ.தே.க வின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியே செயற்படுவார் என்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

கொத்மலை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சஜித் பிரேமதாஸவுக்கு அதிகமானோர் ஜனாதிபதி தேர்தலின் போது வாக்களித்திருந்தனர்.

ஐ.தே.க சார்பில் பாராளுமன்றில் ஒருவர் மாத்திரமே இருந்தார்.

அவரால் நாட்டின் ஜனாதிபதியாக இருக்க முடிந்துள்ளது.

எனவே, ஐ.தே.க ஜனாதிபதியின் தலைமையில் எதிர்வரும் 10 வருடங்களுக்கு இலங்கையில் ஆட்சியமைக்கும்-என்றார்.

# அதிர்ஷ்ட இலாபச்சீட்டில் 7 1/2 கோடி வென்றவர் கடத்தல்!

கொழும்பு, ஓக. 08

அதிர்ஷ்ட இலாபச் சீட்டில் ஏழரை கோடி ரூபாயை வென்ற வர்த்தகர் ஒருவர் கடத்தப்பட்டுள்ளார்.

அவ்வாறு கடத்தப்பட்ட அக்குறணை பிரதேசத்தைச் சேர்ந்த நபரை 10 நாட்கள் தடுத்து வைத்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கம்பளை பிரதேசத்தில் உள்ள இரண்டு வீடுகளில் மாறி, மாறி தடுத்து வைத்தே இவ்வாறு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்ததும் விரைந்து செயற்பட்ட கம்பளை விசேட அதிரடிப் படையினர், அவ்விரு வீடுகளையும் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தி அந்த நபரை மீட்டுள்ளனர்.

அத்துடன் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்றக் குற்றச்சாட்டின் பேரில், நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடத்தப்பட்டு, அடைத்து வைக்கப்பட்டிருந்த கண்டி, அக்குறணை பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட மொஹமட் ஹாசிம் என்பவரே மீட்கப்பட்டுள்ளார்.

அவரை சிறைப்பிடித்து வைத்திருந்ததாகக் கூறப்படும் மர ஆலை உரிமையாளரும் கைது செய்யப்பட்டவர்களுள் அடக்குகிறார்.

(அ)

# இலங்கைக்கு தொடர்ந்தும் ஈரானின் ஆதரவு நீடிக்கும்



கொழும்பு, ஓக. 08

இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்குவதற்கு ஈரானிய ஜனாதிபதி எப்ராஹிம் ரெய்சி இணக்கம் தெரிவித்துள்ளார்.

வெளிவிகார அமைச்சர் அலி சப்ரியுடனான சந்திப்பின்போதே அவர் இந்த விடத்தை தெரிவித்தார்.

அத்துடன் இரு நாடுகளுக்கும் இடையே சீராக வளர்ந்து வரும் உறவுகளைப் பாராட்டியுள்ளதுடன் இரு தரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு இணக்கம் அவர் தெரிவித் தார்.

இதனைத் தொடர்ந்து ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலான கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் ஜனாதிபதி எப்ராஹிம் ரெய்சி அழைப்பு விடுத்துள்ளார்.

ஈரானிய நிறுவனங்கள் இலங்கையில் தீவிரமாக செயற்பட்டு வருவதாகவும், பொருளாதார, தொழில்நுட்ப மற்றும் மருத்துவத் துறைகளில் இஸ்லாமிய குடியரசுடனான ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்த வெளிவிகார அமைச்சர் அலி சப்ரி விருப்பம் தெரிவித்துள்ளார்.

(அ)

# சிறுநீரக அறுவை சிகிச்சை விடயம்; ஜனாதிபதிக்கு அசாத் சாலி கடிதம்!

கொழும்பு, ஓக. 08

பொரளை லேடி ரிஜ்வே வைத்தியசாலையில் நடந்த முறைகேடான சிறுநீரக அறுவைச் சிகிச்சை குறித்து சுதந்திரமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் முன்னாள் ஆளுநருமான அசாத் சாலி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவர் கடிதமொன்றையும் அனுப்பியுள்ளார்.அக்கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது" முஹம்மட் ஹம்தி எனும் குழந்தைக்கு லேடி ரிஜ்வே வைத்தியசாலையில் நடாத்தப்பட்ட சிறுநீரக அறுவைச் சிகிச்சையின்போது இடம்பெற்ற கொடூரத்தை தங்களது மேலான கவனத்திற்கு கொண்டுவருகிறேன். சிறுவனின் செயலிழந்த இடது பக்க சிறுநீரகத்தை அகற்றுவதற்குப் பதிலாக, திறம்படச் செயற்பட்ட வலது பக்க சிறுநீரகம் அகற்றப்பட்டிருக்கிறது. இதனால், முஹம்மட் ஹம்தி என்ற மூன்று வயதுக் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளதை தாங்கள் அறிந்திருப்பீர்கள்.

ஆனால், அறுவைச் சிகிச்சையில் நடந்த தவறை மறைக்கும் வகையிலேயே மருத்துவச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது. இதனால், இச் சிகிச்சைக்குப் பின்னால் பாரிய மோசடி இடம்பெற்றிருப்பதாக பலத்த சந்தேகமும் ஏற்பட்டுள்ளது. தவறுதலாக நடந்ததா? அல்லது திட்டமிட்டுத் திருடப்பட்டதா? என்பதை அறிவதில் மக்கள் ஆர்வமாக உள்ளனர்.

அவயங்கள் அபகரிப்பு மற்றும் சிறுநீரக மோசடியுடன் தொடர்புடைய மோசடிப் பேர்வழிகளின் கரங்கள் இதற்குப் பின்னாலிருந்திருக்கலாம். எனவே, இதுகுறித்த பின்னணிகளை அறிவதற்கு சுதந்திரமானதும், நியாயமானதுமான விசாரணைகளை நடத்துமாறு நான் கோருகிறேன்.

மருத்துவத்துறையை மாபியாக்களின் செல்வாக்கிற்குள் கொண்டுவரும் இவ்வாறான மறைமுக முயற்சிகளை நிறுத்துவதற்கு இவ்விசாரணைகள் உதவட்டும். சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தும் வகையில், இவ் விசாரணைகள் அமைவது அசியம். தங்களது நேர்மையான தலைமைத்துவம் இதைச் செய்யுமெனவும் நான் நம்புகின்றேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# மன்னாரில் இலத்திரனியல் கழிவுகளை சேகரிக்கும் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பம்




மன்னார், ஓக. 08

மன்னாரில், இலத்திரனியல் கழிவுகளை சேகரிக்கும் நிகழ்ச்சித் திட்டம் நேற்று மாவட்ட செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் இலத்திரனியல் கழிவுகளை சேகரிக்கும் நிகழ்ச்சித்திட்டம் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மன்னார் மாவட்ட அலுவலகத்தினால் நேற்று மன்னார் மாவட்ட செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மன்னார் மாவட்ட பொறுப்பதிகாரி யக்கோ பிள்ளை தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்டான்லி டிமெல் கலந்துகொண்டார்.

மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் பிரதேச செயலாளர்கள், வைத்தியர் ஒஸ்மன் டெனி, திணைக்கள தலைவர்கள், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்டவர்களும் இதில் கலந்து கொண்டனர்.

இலத்திரனியல் கழிவுகளை முறையாக சேகரிப்பதன் மூலம் சுற்றாடலை பாதுகாத்தலும், முகாமைத்துவம் செய்தலும் எனும் கருப்பொருளின் கீழே இந்த நிகழ்வு ஆரம்பமானது.

இதில் முதற் கட்டமாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் வலயக்கல்விப்பணிப்பாளர் ஆகியோர் இலத்திரனியல் கழிவுகளை மாவட்ட பொறுப்பதிகாரியிடம் கையளித்தனர்.

நேற்று முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமைவரை இலத்திரனியல் கழிவுகளை மன்னார் மாவட்ட செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இடத்தில் ஒப்படைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்துக்கு சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் திடீர் விஜயம்

யாழ்ப்பாணம், ஓக. 08

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்துக்கு நேற்றைய தினம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்யா நவரத்தினம் விஜயம் மேற்கொண்டார்.

குறித்த அலுவலகத்தின் தவிசாளர் சிரேஷ்ட சட்டத்தரணி மகேஷ் கட்டுலந்தவின் அழைப்பின் பேரிலேயே இவ்விஜயம் இடம்பெற்றிருந்ததாகக் கூறப்படுகின்றது.

இதன்போது குறித்த அலுவலகத்தில் இடம்பெறும் விசாரணைகள் தொடர்பிலும் அலுவலகத்தின் செயற்பாடுகள் தொடர்பிலும் கௌசல்யா நவரத்தினம் கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலில் குறித்த அலுவலகத்தின் நிர்வாக அதிகாரி சிரேஷ்ட சட்டத்தரணி தற்பரன், யாழ்.பிராந்திய இணைப்பாளர் செல்வகுமார், ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் எல்.இளங்கோவன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

(அ)

# கோப்பாய் ஆசிரிய கலாசாலை நூற்றாண்டு நினைவிடத் திறப்பு

யாழ்ப்பானம், ஓக. 08

நூற்றாண்டு காணும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் அமைக்கப்பட்ட நூற்றாண்டு நினைவிடத் திறப்பு விழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விக்கான பிரதம ஆணையாளர் கலாநிதி கே.ஏ.டி. புண்யதாசவும் சிறப்பு விருந்தினர்களாக ஆசிரிய கல்விக்கான பணிப்பாளர் ஸ்ரீமா தசநாயக்கா தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கான பணிப்பாளர் களனி ஹேமாலி ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி சு. பரமானந்தம் கோப்பாய் நவமங்கை நிவாச நிறுவுநரும் முன்னாள் ஆசிரிய கல்வி பணிப்பாளருமாகிய சுவர்ணா நவரட்ணமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## ஜனாதிபதி...

தினத்தை கலந்தாலோசனையின் பின் தெரிவிப்பதாக ஜனாதிபதி செயலகம் தனக்கு அறிவித்துள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார். (ஐ)

## புலிபாய்ந்த...

பணிப்பாளரை அவரின் பணிமனையில் சந்தித்து உரையாடினோம். இந்த விடயம் தொடர்பாக உதவிப் பணிப் பாளர், "வெலிஓயாவில் இருக்கும் மீன வர்கள் படகுமூலம் தொழில் செய்வதற் காக புலிபாய்ந்தகல் பகுதியில் தொழில் செய்வதற்காக 4 படகுகளுக்கு அனுமதி தரும்படி கோரினர் என்றும் இது தொடர்பாக கொழும்பில் கடற் தொழில் அமைச்சின் பணிப்பாளரை சந்திக்க செல்வதாகவும் வெலிஓயாவை சேர்ந்த மீனவர்கள் கூறியிருந்தனர் என்றும் - எம்மிடம் தெரிவித்தார்.

இதற்கு நாம், எமது மீனவர்களுக் கான இடங்கள் போதாதத்துள்ளது. இந்த நிலையில், குடியேற்றவாசிகளுக்கென ஒவ்வொரு இடமாக கொடுத்துக் கொண்டு போனால் எமது மீனவர்களின் நிலைமை என்ன? இப்படியான திணிப்பை எமது தமிழ் மீனவர்கள் ஏற் றுக்கொள்ள மாட்டார்கள் என்பதையும் சுட்டிகாட்டினோம். அத்துடன், வாடி கள் அமைப்பதற்கான அனுமதி பிரதேச செயலகத்தாலேயே வழங்கப்பட வேண் டும் என்ற விடயத்தையும் அவரின் கவனத்துக்குக் கொண்டு வந்தோம் - என்றும் ரவிகரன் கூறினார். (ஐ)

## மீண்டும்...

வெளியாகியுள்ளன.

இந்த சதித் திட்ட முயற்சியின் பின் னணியில் முந்தைய போராட்டத்தில் ஈடு பட்ட ஒரு குழுவினரும் இருக்கின்ற னர் என் றும் உளவுத்துறை அறிக்கையில் கூறப்பட் டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

நாட்டின் பொருளாதார வேலைத் திட்டத்தை சீர்குலைப்பதே இதன் பின் னணியில் உள்ள சக்திகளின் முக்கிய நோக்கம்.

இந்த சதியின் பின்னணியில் உள்ள குழுக்கள் யார் என்பதை புலனாய்வு அமைப்புகள் விரிவாக சுட்டிக்காட்டி யுள் ளன. புலனாய்வு அமைப்புகள் பல ஊடக நிறுவனங்களின் பெயரையும் குறிப்பிட் டுள்ளதாகவும் அந்த ஊடக நிறுவனங்கள் மக்களைத் தூண்டும் வகையில் ஊடக அறிக்கைகளை வெளியிடுவதாகவும் குறிப் பிடப் பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் எதிர்க்கட்சி மற்றும் தமிழ் கட்சியைப் பிரதிநிதித்து வப்படுத்தும் உறுப்பினர் ஒருவருக்கும் தொடர்பு இருப்ப தாகவும் கூறப்படுகின் றது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவ சாயிகளுக்கு அரசு தண்ணீர் தருவ தில்லை. இத னால் உணவுப் பஞ்சம் ஏற்படும் என்றும் கூறி விவசாயிகளை வீதிக்கு இறக்கி அதன் மூலம் அரசியல் அதிர்வலைகளை உருவாக்குவதே சதி முயற்சியாளர்களின் திட்டம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## விபத்தில்...

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

உயிரிழந்த இளைஞர், தலைக்கவசம் அணியாத நிலையில் மோட்டார் சைக்கிள் ஓடப் பழகியுள்ளார். இந்நிலை யில், கட்டுப்பாட்டை இழந்து மதிலு டன் மோதி விபத்துக்கு உள்ளானார்.

உடனடியாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், பின்னர் யாழ். போதனா மருத் துவமனைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று அவர் உயிரிழந்தார்.

இவரின் மரணம் தொடர்பான விசார ணைகளை திடீர் மரண விசாரணை அதி காரி நமசிவாயம் பிறேம்குமார் மேற் கொண்டார். (ஐ-03-02)

## வழிப்பறியில்...

செலுத்திய பொலிஸார் நேற்று முன்னெ டுத்த திடீர் நடவடிக்கையில் வழிப்பறி யில் ஈடுபட்டு வந்த 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

வவுனியா - தம்பனையை சேர்ந்த இருவரும், பெரிய தம்பனையை சேர்ந்த இருவரும் வவுனியா நகரம் மற்றும் யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒருவருமாக 6 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள் ளனர். (ஐ)

## 13 குறித்து...

வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்னைக்கு தீர்வு காண்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க அர்ப்பணிப்புடன் உள்ளார் என்றும் அவர் இதன்போது கூறினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், "ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க 13ஆவது திருத்தத்தை நடை முறைப்படுத்த முயற்சி எடுத்து வருகின் றார். பாராளுமன்றத்தில் வடக்கு, கிழக்கின் மக்கள் பிரதிநிதிகளிடம் 13 ஆவது அரசமைப்பை நடைமுறைப் படுத்துவது குறித்து கருத்துகளைக் கேட்டறிந்தார். அண்மையில், பாராளு மன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சிகளையும் அழைத்து சர்வகட்சி மாநாடு ஒன்றையும் நடத்தி னார்.

ராஜீவ் - ஜே. ஆர் ஜெயவர்த்தன ஆகியோர் அன்று 13ஆவது திருத்த சட்டமூலத்தை கொண்டுவந்தபோது அன்றைய அமைச்சரவையில் ஓர் அமைச்சராக அங்கம் வகித்த தற்போ தைய ஜனாதிபதி இந்த அதிகாரப் பகிர்வு பிரச்னைக்கு நிரந்தமான தீர்வை முன் வைப்பார் என்று எனக்கு நம்பிக்கை இருக்கின்றது.

அதிகாரப் பகிர்வின் மூலம் நாடு துண்டாடப்படும் என்று தெற்கில் உள்ள அரசியல் தலைவர்கள் கருத்துகளை வெளியிடும் அதேநேரம் முதலில் மாகாண சபை தேர்தலை நடத்துமாறும் எமக்கு முழுமையான அதிகாரப் பகிர்வு மாத்திரமே வேண்டும் என்றும் வடக்கு, கிழக்கு அரசியல் தலைவர்கள் கருத்து களை முன்வைக்கின்றனர். இவை இரண் டுமே இரு தீவிர நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றன.

13ஆவது அரசமைப்பை அமுல் படுத்துவதில் மிதமான போக்குடன் இரு தரப்பும் சுமுகமான கலந்துரையாடல் களை நடத்தி இப்பிரச்னைக்குத் தீர்வைக் காண்பதே இந்நாட்டின் முன்னேற்றத் துக்கு உகந்தது. 13ஆவது அரசமைப்பின் ஊடாக வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதில் ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் உள்ளார். ஆனால், இதில் பொலிஸ் அதிகாரத் தைப் பகிர்வதில் மட்டும் சில சிக்கல்கள் இருக்கின்றன. அவற்றுக்கும் தீர்வு காண முடியும் என்று ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப் படுத்தும் மக்கள் பிரதிநிதிகளை போன்றே தெற்கில் உள்ள கடும்போக்கு வாத சில சிங்களத் தலைவர்கள் வெளி யிடும் தீவிர கருத்துகளால் தெற்கில் உள்ள சிங்கள மக்கள் அச்சம் அடையத் தேவையில்லை. இவை பெரும்பாலும் அரசியல் நோக்கங்களில் கூறப்படலாம்.

இரு தரப்பும் பரஸ்பர புரிந்துணர்வு டன் நம்பிக்கை வைத்து செயல்படுவதன் மூலமே இப்பிரச்னையைத் தீர்க்க முடி யும். அவ்வாறான நம்பிக்கையை ஏற் படுத்துவதற்கு ஊடகங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

13ஆவது திருத்தத்தை செயல்படுத் தத் தேவையான பரிந்துரைகளை எழுத்துமூலம் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள் ளார். இதன்படி, கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி என்ற வகையில் எமது கருத்துகளை முன் வைக்க அவசியமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம் - என்றார். (ஐ)

# நாமல் மின் கட்டணம் செலுத்தவில்லை என்று மின்சார சபை அறிவிக்கவில்லை!

## சாகர காரியவசம் சொல்கிறார்

கொழும்பு, ஓக. 08

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மின்சார கட்டணம் செலுத்த வில்லை என்று இலங்கை மின்சார சபை அறிவிக்கவில்லை.

நிலுவை கட்டணம் ஏதும் இருக்குமா யின் அதை மின்சார சபை அறிவித்தால் கட்டணம் செலுத்தலாம். இந்த விவகா ரத்தை ஒரு தரப்பினர் தமது அரசியலுக் காக பயன்படுத்திக் கொள்கிறார்கள் என சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன பணி மனையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட் டவை வருமாறு,

போராட்டத்துக்கு பின்னர் கட்சியை பலப்படுத்தியுள்ளோம். ராஜபக்ஷர் களின் அரசியல் பயணம் முடிவடைந்து விட்டது என்று ஒரு தரப்பினர் எதிர் பார்த்தார்கள். பெரும் போராட்டத் துக்கு பின்னர் பலமடைந்துள்ளோம். ராஜபக்ஷர்கள் மீது நாட்டு மக்கள் முழுமையாக நம்பிக்கை வைத்துள் ளார்கள்.

திருமண விழாவுக்கு பயன்படுத்திய மின்சாரத்துக்கான கட்டணத்தை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ செலுத்தவில்லை என்ற புதிய அரசியல் பிரசாரத்தை மக்கள் விடுதலை முன்னணியினர் தற்போது முன்னெ டுத்துள்ளார்கள். இவ்விடயம் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜ பக்ஷவிடம் வினவினேன்.

இதற்கு பதிலளித்த பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ "திருமண விழாவுக்கு பயன்படுத்திய மின்சாரத் துக்கு இதுவரை கட்டணம் செலுத்த வில்லை என்று இலங்கை மின்சார சபை இதுவரை அறிவிக்கவில்லை. மின்சார நிலுவை தொகை ஏதும் இருப்பதாக மின்சார சபை அறிவித்தால் அதை செலுத்த தயார்" என குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மின்கட்டணத்தை செலுத்த வில்லை என்ற விவகாரம் தற்போது அரசியல் தேவைக்காக பயன்படுத்தப் படுகிறது. கடந்த காலங்களிலும் இதுபோன்ற பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன ஆனால் எந்த குற்றச் சாட்டுக்களும் நிரூபிக்கப்படவில்லை - என்றார். (ஐ)

# காஞ்சனவின் இல்லத்துக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு

கொழும்பு, ஓக. 08

மாத்தறையில் உள்ள மின்சக்தி, வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜே சேகரவின் இல்லம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளுக்கு விசேட பாது காப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

பயிர்ச்செய்கைக்கு நீர் வழங்குமாறு கோரி விவசாயிகள் குழுவொன்று மாத் தறைக்கு செல்லவுள்ளதாக கிடைத்த தகவலுக்கமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இதன்படி, அமைச்சரின் இல்லத்திற் குச் செல்லும் அனைத்து வீதிகளிலும் பொலிஸ் வீதித்தடைகள் போடப்பட் டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

அத்துடன், அம்பாந்தோட்டையில் இருந்து மாத்தறைக்கு செல்லும் வழிக ளிலும், கொழும்பில் இருந்து மாத்த றைக்குச் செல்லும் வழிகளிலும் பொலிஸ் வீதித்தடைகள் போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# "தாஜுதீன் உயிருடனே எரித்து கொல்லப்பட்டார்"

கொழும்பு, ஓக. 08

பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜுதீன் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டார் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் நடந்த நிகழ்வு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தாஜுதீன் அவரின் வாகனத்திலேயே எரியூட்டப்பட்டார். அரச குடும்பத்தைச் சேர்ந்த இளவரசர் ஒருவரின் காதலியை பின்தொடர்ந்தார் என்ற காரணத்தால் தாஜுதீன் கொல்லப்பட்டார்.

2019ஆம் ஆண்டில் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்ததும் இந்த வழக்குக்கு என்ன நேர்ந்தது என்பதே தெரியவில்லை - என்றார். (ஐ)

## உலக கிண்ண...

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொட ருக்காக இந்திய அணி பாகிஸ்தான் செல்ல மறுத்த நிலையில் அந்த அணிக் கான போட்டிகள் இலங்கையில் நடை பெறவுள்ளன. இந்த நிலையில் பாகிஸ் தான் அணி உலகக் கிண்ணத் தொடருக் காக இந்தியா செல்ல மறுக்கும் பட்சத் தில் பாகிஸ்தான் அணிக்கான போட்டி களை இலங்கை அல்லது பங்களாதே ஷில் நடத்தவும் ஆலோசிக்கப்பட்டது.

இந்த நிலையில், இந்தியாவில் நடை பெறும் ஒருநாள் உலகக் கிண்ணத்தில் பாகிஸ்தான் அணி பங்கேற்கும் என்று அந்த நாட்டு அரசு அறிவித்து.

இது தொடர்பில் அந்த நாட்டு அரசு விடுத்த செய்திக் குறிப்பில், "விளை யாட்டு அரசியலுடன் இணையக் கூடாது என்பதை பாகிஸ்தான் அரசு தொடர்ந்து கடைபிடித்து வருகிறது. அதனால், இந்தியாவில் நடைபெறும் 50 ஓவர் உலகக் கிண்ணத் தொடரில் கலந்து கொள்ள பாகிஸ்தான் அணியை இந்தியா அனுப்ப எங்களது அரசு முடிவு செய் துள்ளது - என்று தெரிவித்திருந்தது. (ஐ)

## முறையற்ற...

இருவரும் சில நாட்களுக்கு முன்னர் ஊரை விட்டுச் சென்றுள்ளனர்.

இந்த நிலையில், அவர்களை தொடர்பு கொண்ட அவர்களின் உறவி னர்கள் இருவரையும் சேர்த்து வைப்பதா கவும் ஊர் திரும்புமாறும் தெரிவித்துள் ளனர் என்று அறிய வருகிறது.

இதையடுத்து, இருவரும் நேற்று ஊருக்குத் திரும்பினர். இதன்போது உறவினர்கள் நடத்திய தாக்குதலில் குடும்பஸ்தர் படுகாயமடைந்தார்.

தாக்குதல் சம்பவத்தை அறிந்து அங்கு வந்த சுன்னாகம் பொலிஸார் காயம டைந்தவரை மீட்டு தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால், அவர் செல்லும் வழியிலேயே உயிரிழந்து விட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# வடக்கு, கிழக்கு மாகாணங்கள் வறட்சியினால் கடும் பாதிப்பு!

கொழும்பு, ஓக. 08

**வறட்சி காரணமாக 4 மாகாணங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. வடக்கு, கிழக்கு, வட மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்கள் வறட்சி காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.**

குறித்த 4 மாகாணங்களில் 28,000 குடும்பங்களைச் சேர்ந்த 89,408 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தின் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, மருதங்கேணி, சங்கானை பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த மக்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள தரவுகள் தெரிவிக்கின்றன.

கிழக்கு மாகாணத்தின் கிண்ணியா, சேருவில, குச்சவெளி, வெருகல், மூதூர், கோமரங்கடவல பிரதேச செயலகப் பிரிவுகளில் 2746 குடும்பங்களை சேர்ந்த 8976 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வட மேல் மாகாணத்தில் குருணாகல், பமுனகொட்டுவ, கிரிபாவ பிரதேச செயலகப் பிரிவுகளை சேர்ந்த மக்களும் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் வரை நாட்டிற்கு போதியளவு மழைவீழ்ச்சி கிடைப்பதற்கான சாத்தியமில்லை என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

(அ)

# மீண்டும் மின் கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது

கொழும்பு, ஓக. 08

மின்சார கட்டணம் தொடர்பில் பல்வேறு தகவல்கள் வெளியாகி வருகின்றபோதும், அவ்வாறு இந்த ஆண்டு மீண்டும் மின்சார கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் சமூக வலைத்தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவொன்றில் இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்படி, ஆண்டுதோறும் ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் மாத்திரம் மின்சார கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்வது அரசாங்கத்தின் தீர்மானம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், திட்டமிட்டபடி தடையின்றி மின் விநியோகத்தினை மேற்கொள்வதற்கு இலங்கை மின்சார சபை தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார். இதனிடையே, இலங்கை மின்சாரசபை மற்றும் நீர்ப் பாசன திணைக்களத்துடன் சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

இந்த நிலையில், தடையின்றி மின் விநியோகத்தை அமுல்படுத்துவது மற்றும் விவசாயத்துக்குத் தேவையான அதிகபட்ச நீரை உறுதி செய்வது தொடர்பில் இன்றைய தினம் அமைச்சரவையில் கவனம் செலுத்தப்படவுள்ளது எனவும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தமது ருவிட்டர் பதிவில் மேலும் தெரிவித்தார். (அ)

# யாழில் வறட்சியால் 69,113 பேர் பாதிப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 08

வறட்சியுடன் கூடிய காலநிலை காரணமாக யாழ் மாவட்டத்தில் 69113 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது யாழ்.மாவட்டத்தில் நிலவுகின்ற வறட்சியுடன் கூடிய காலநிலை காரணமாக இதுவரை 21714 குடும்பங்களைச் சேர்ந்த 69113 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் கூடுதலாக சங்கானை, சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவுகளில் பாதிப்புகள் உணரப்பட்டுள்ளன.

அந்த வகையில் சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் 15965 குடும்பங்களைச் சேர்ந்த 49160 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 3135 குடும்பங்களைச் சேர்ந்த 11160 பேரும், நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் 1028 குடும்பங்களைச் சேர்ந்த 3146 பேரும், மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் 956 குடும்பங்களைச் சேர்ந்த 3067 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் குடிதண்ணீர் விநியோகத்துக்காக தற்போது 6053 குடும்பங்களைச் சேர்ந்த 19704 பேருக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

# தமிழக அகதி முகாமில் இலங்கை பெண் மாயம்

சென்னை, ஓக. 08

தமிழகம் - மண்டபம் ஏதிலிகள் முகாமில் இருந்த 29 வயதுடைய இலங்கைப் பெண் ஒருவர் காணாமல் போயுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த பெண் கடந்த ஜூலை மாதம் 27ஆம் திகதி முதல் காணவில்லை என முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அவர் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் முதல் மண்டபம் ஏதிலிகள் முகாமில் உள்ளதாக தமிழக பொலிஸார் குறிப்பிட்ட னர்.

இது தொடர்பில் மண்டபம் பொலிஸ் நிலையத்தில், முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், அவரது கணவர் குறித்த முறைப்பாட்டைச் செய்துள்ளதாகவும் தமிழக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# வறட்சியால் பாதிப்புற்ற விவசாயிகளுக்கு நட்டஈட்டை வழங்க ஜனாதிபதி இணக்கம்

கொழும்பு, ஓக. 08

வறட்சியான வானிலை காரணமாக பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈட்டை பெற்றுக் கொடுக்க ஜனாதிபதி இணங்கியுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில், பயிர்ச்செய்கை பாதிப்பு தொடர்பான மதிப்பீடுகளை ஆரம்பிக்குமாறு விவசாயம் மற்றும் விவசாயிகள் காப்புறுதி சபைக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அத்துடன், எம்பிலிபிட்டிய விவசாயிகளுக்கு வெலிஓயா நீர்த்தேக்கத்தில் இருந்து தற்போது குறிப்பிட்டளவு நீர் திறந்துவிடப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர கூறினார்.

இதன்மூலம் 15 - 20 வீதமான செய்கைகளை பாதுகாக்க முடியுமென அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார். (அ)

# ரணிலும் மகிந்தவும் ஒரே அணி நிறத்தில் மட்டுமே வித்தியாசம்

## அனுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 08

மாற்றத்தை எதிர்ப்பார்த்து ரணிலுக்கு பதிலாக மகிந்தவையும் மகிந்தவுக்கு மாற்றாக ரணிலையும் அதிகாரத்திற்கு கொண்டு வருவதால் எந்த பயனுமில்லை எனவும் இவர்கள் இரண்டு தரப்பினர் அல்ல ஒரே அணியினர் எனவும் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் ஜா-எல பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொது மக்களின் பணத்தை கொள்ளையிடுவதற்கு பதிலாக அதனை பாதுகாக்கும் அரசியல் அவசியம். அந்த மாற்றத்தை தேசிய மக்கள் சக்தியே ஏற்படுத்தும்.

பல தசாப்தங்களாக எமது நாட்டு மக்கள் மாற்றத்தை எதிர்ப்பார்த்து அரசாங்கங்களை ஆட்சிக்கு கொண்டு வந்தனர். அரசாங்கங்களை கவிழ்த்தனர். திரும்பிப் பார்த்தால் எந்த மாற்றங்களும் ஏற்படவில்லை.

உண்மையான மாற்றமே நாட்டுக்கு தேவைப்படுகிறது. நாட்டு மக்கள் தலைவர்களையும் அரசாங்கங்களையும் மாற்றியபோதிலும் அரசியல் கலாசாரமோ, பொருளாதார நடைமுறைகளோ, கொள்ளைகளோ மாற்றமடையவில்லை.

எமது நாட்டுக்கு அரசியல் கலாசாரமும், பொருளாதார கொள்கையும் சிறந்த சமூக மாற்றமும் அவசியம். பல தசாப்தங்களாக மக்கள் எதிர்ப்பார்க்கும் அந்த மாற்றத்தை செய்ய தேசிய மக்கள் சக்தி தயாராக இருக்கின்றது.

நாட்டை மாறி, மாறி ஆட்சி செய்தவர்கள் வர்ணங்களில் மாத்திரமே வித்தியாசமானவர்கள். அரசியலில் இவர்கள் இரண்டு அணிகள் அல்ல. ஒரே அணியினர். கொள்கைகளிலும் செயற்பாடுகளில் ஒரே மாதிரியானவர்கள்.

விற்பனை செய்யப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுகத்தை திரும்ப பெறவும், ஈஸ்டர் தாக்குதலுக்கு தண்டனை வழங்கவும் மத்திய வங்கி திருடன் ரணில் விக்ரமசிங்கவுக்கு தண்டனை வழங்கவும் கோட்டாபயவை ஆட்சிக்கு கொண்டு வந்தனர்.

எனினும் கோட்டபாய வீட்டுக்கு சென்ற பின்னர் அதே வாக்குகளில் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தனர். எப்படி இது நடக்கலாம்.

அரசியலில் இவர்கள் இரண்டு தரப்பினரும் தனித்தனி அணியல்ல, இரண்டு தரப்பினரும் ஒரே அணி என்பதையே இது காட்டுகிறது.

நிமல் சிறிபால டி சில்வா 1994 ஆம் ஆண்டில் சந்திரிகா அரசாங்கத்திலும் 2005 ஆம் ஆண்டு மகிந்த அரசாங்கத்திலும் 2015 ஆம் ஆண்டில் ரணில் அரசாங்கத்திலும் 2019 ஆம் ஆண்டு கோட்டாபய அரசாங்கத்திலும் தற்போது 2023 ஆம் ஆண்டில் ரணில் அரசாங்கத்திலும் அமைச்சர்.

எந்த மாற்றமும் இல்லை. மகிந்த அமரவீர சந்திரிகா முதல் தற்போதைய ரணில் விக்கிரமசிங்க வரையான அனைத்து அரசாங்கங்களிலும் அமைச்சர்.

மக்கள் மாற்றங்களை செய்கின்றனர், எனினும் அவர்கள் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்கின்றனர். எனினும் மக்கள் தற்போது உண்மையான மாற்றத்தை எதிர்ப் பார்த்துள்ளனர்.

அந்த மாற்றத்தை தேசிய மக்கள் சக்தியால் மாத்திரமே ஏற்படுத்த முடியும் - என்றார். (அ)

# சுகாதார அமைச்சரை சிலர் தவறாக வழிநடத்தியுள்ளனர்

## வைத்தியர் ரவி குமுதேஷ்

கொழும்பு, ஓக. 08

சாதாரண கொள்முதலுக்கும் அவசர கால கொள்முதலுக்கும் இடையே நேர வித்தியாசம் மட்டுமே உள்ளதாக சுகாதார அமைச்சர் தெரிவித்திருப்பதன் மூலம் சுகாதார அமைச்சரை சிலர் எவ்வளவு தவறாக வழி நடத்தியுள்ளனர் என்பதை புரிந்துகொள்ள முடிவதாக சுகாதார வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சர்ச்சைக்குரிய செபியுரோக்ஸீம் என்ற அண்டிபயாடிக் மருந்தை திடீரென கொள்வனவு செய்ததன் காரணமாகவே சுகாதார சேவைக்கு ஒரு பில்லியன் ரூபாவிற்கும் அதிகமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

குறித்த மருந்தை சாதாரண கொள்முதல் முறையில் வாங்க முடியுமானால், ஒரு ஊசி 0.18 டொலருக்கும் குறைவாகவே கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் காணப்பட்டது.

மேலும், சாதாரண கொள்முதல் மூலம் 175 ரூபாய்க்கு வாங்கக்கூடிய இன்ஸோபரைன் மருந்தை , அவசரகால கொள்முதலின் கீழ் ரூ. சுமார் 1000 ரூபாய்க்கு வாங்கப்பட்டுள்ளது.

250 ரூபாய்க்கு வாங்கக்கூடிய இன்சுலின் மருந்து ஒன்று , 1100 ரூபாய்க்கு வாங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 200 ரூபாய்க்கு வாங்கக்கூடிய மிரோபெனம் மருந்து ஒன்றை 1950 ரூபாய்க்கு வாங்கப்பட்டுள்ளது. அவசரகால கொள்முதல் செய்வதற்கு 6 மாத கையிருப்பு போதுமானது.

ஏனெனில் சாதாரண கொள்முதல் மூலம் 90 வீதமான மருந்துகளை 6 மாதங்களுக்குள் பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே, வரம்பற்ற தொகை மருந்துகளை அவசர கால முறையில் வாங்குவது மிகவும் பகுத்தறிவற்ற நடைமுறையாகும். - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.